மலர் 4 :: 24-8-57—சனி :: இதழ் 8

தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

இலக்கியமும் சமுதாயமும்

மனிதன் பகுத்தறிவைக் கருவியாகக் கொண்டு, சமூக வாழ்விலே நாடொறும் நிகழும் நிகழ்ச்சிகளைக் கருப் பொருளாகக் கொண்டு, வாழ்க்கைக் கண்ணோட்ட விளக்கத்தினைக் கருவூலமாகக் கொண்டு, உயரிய உணர்ச்சிகளையும், கலை உணர்வு மிளிரும் கருத்துக்களையும், நவில்வோர்க்கு நன்மை பயக்கும் ஈடு இணையற்ற எண்ணங்களையும், குறிப்பிட்ட சூழ்நிலையில், ஆராய்ச்சிக் கண்ணோட்டத்தில், ஆற்றல் ததும்பிய சொற்களால் இலக்கண வரையறையின்றி, மக்களினம் இன்பம் துய்க்கப் புலமையுடன் பாடப்படுவது தான் இலக்கியம். அதுவே வாழ்க்கைப் பாதை வளம்பெற வழிகாட்டும் ஒளிவிளக்கு. மக்களின் மனத்தினை ஈர்க்க வல்ல மரங்களடர் தருசோலை. பாவனைகளையும் தெற்றெனத் தெளிவாக்கும். இலக்கிய ஆசிரியன், இலக்கியம் தோன்றிய காலத்து வாழ் மக்களின் வரலாற்றினையும் ஓரளவு பொறித்துச் செஞ்சொற்கோயில் அமைத்து, நீலக் கடல் மத்தியில் மாணிக்கக் குன்று மிளிருமாப் போல் செய்வானெனில் இலக்கியத்தின் அவசியத்தினை எடுத்தியம்பவும் வேண்டுமோ? எழுத்திலே புதுமை, ஏட்டிலே புயல், எண்ணத்திலே புரட்சி, சிந்தனையில் எழுச்சி முதலியனகொண்டு இலக்கியம் எழுதும் ஆசிரியர்கள் மக்களைச் சிந்திக்க வைப்பதோடன்றி வாழ்க்கை எனும் புது அடிவானில் மறுமலர்ச்சி எனும் உதயசூரியன் பளிச்சிட்டு உதிக்கச் செய்கின்றனர்.

மொழி வளர்ச்சிக்கும், சமுதாயச் சீர்திருத்தங்கட்கும், தன் களை அழகுக் கண்கொண்டு நோக்கி, நனி சிறந்த நாகரிகத்தோடு இயற்றப்படும் இலக்கியங்கள் சமூகத்தில் என்றும் நிலவும் தன்மை வாய்ந்தவை. உள்ளத்து ஊறும் உணர்ச்சிகளை, பொன்னெழுத்துக்களால் பொதித்து, நுட்பத்தை உயிர் நாடியாகக் கொண்டு, நற் பண்புகள் மக்கள் மன்றத்தில் நிலவ வழி செய்யும் இலக்கியங்கள் இறவா வரம் பெறும். கொள்ளை இன்பத்தினை வாரி இறைப்பதுடன், எல்லை இல்லா அவலச் சுவை கொண்டு மக்கள் மனம் வளம் பெறவும், வலுப் பெறவும் செய்யும் இலக்கியங்கள் பொன்றாப் புகழுடன் பொலியும். புரையோடிக்கொண்டிருக்கும் சமுதாயத்தைச் சீர்திருத்தி, பழையன கழிதலுக்கும், ஏற்கத் தகு புதியன புகுதலுக்கும் வழிவகை வாழ்ந்தவற்றையும், எவ்வுயிரையும் தம் உயிர்போல் கருதிப் பொது நோக்க மணங் கமழ வாழ்ந்த விதத்தையும் காட்டுபவை காலத்தாற் கரைக்க முடியாத அகநானூறும், புறநானூறும் தானே? சங்க கால இலக்கியங்கள், அப் பொற்காலச் சமுதாய வாழ்வைச் சித்தரிக்கும் ஓவியங்கள் என்பது அழ்ந்த விந்தடங்கிய அறிவுடைச் சான்றோரின் முடிவு.

ஹோமர், ஐரோப்பிய உயர் தனிச் செம்மொழிகளுள் ஒன்றான கிரேக்க மொழியில் எழுதிப் போந்த 'இலியட்' கிரேக்க நாட்டினர் அன்று [illegible] சிறந்த நாகரிகச் சமுதாயத்தினராய் வாழ்ந்த கதையை நமக்குத் தெரிவிக்கின்றது. இத்தாலிய மொழியில் டாண்டேயால் வரையப்பட்ட 'பிவைனே காமடியா'

சங்ககால இலக்கியங்கள் சமுதாயத்தின் புகைப்படங்கள்

இன்பத்தை எல்லை இன்றி வாரி இறைக்கும் இனிமை நிறை இளமரக்கா. சமுதாயத்திற்குரிய நியதிகளை வகுத்து வாழ வழி காட்டும் பொதுச் சட்டத் தொகுப்பு. காலத்தினையும், காலப் போக்கில் வாழும் மக்களின் மனத்தினையும் காட்ட வல்ல கண்ணாடி. சிந்தனையைத் தூண்டிச் சுடர்விட்டு இழையச் செய்யும் ஒளித்தாரை. சுருங்கக் கூறின், மக்கள் மன்ற மறு மலர்ச்சிக்கும், புதுச் சமுதாய அமைப்பிற்கும் வழி வகை காட்டும் கலங்கரை விளக்கம்.

தொன்மை மிகுந்த மொழிக்கு இலக்கண, இலக்கியங்கள் அதிகமிருக்குமென்பது வெள்ளிடை மலை. அவ்வாறுள்ள வாய இலக்கியங்கள் அழிந்தொழிந்த பண்டை வழக்குகளையும், அருஞ் சொல் ஆட்சியினையும், மக்கள் நடை உடை மான ஒளியையும் பகுத்தறிவு விளக்கத்தினையும் பெற, வரலாற்றினை இனிமை பயக்கும் முறையில் வாசிக்க வெகுவாகப் பயன்படும் செல்வம் இலக்கியம். மேலும், செம்மொழியின் துணையால், சொற்களின் உதவியால், கற்பனைத் தோற்றங்கொண்டு, அழகுச் சுவையால் யாக்கப்படும் இலக்கியங்கள் மனத் துன்பம் நீக்குபவை. அவை கவலை, ஏக்கம் முதலியவற்றிற்கு மாசு மறுவற்ற மருந்து. உடற்சோர்வினையும், உள்ளச்சோர்வினையும் நீக்கும், நறவுமொழிப் புனிதவதி நங்கை நல்லாள் போன்றும், மக்கள் மழலைச் செல்வம் போன்றும் உதவ வல்லன. தெளிவாகச் சொல்லப் போனால் கொள்ளை இன்பத்தினை வாரி இறைக்கும் வாழ்க்கை இன்றியமையாமைகளுள் இலக்கியமும் ஒன்று.

அகப் பொருள், புறப்பொருள் செய்யும் புரட்சிகரக் கொள்கைகளை முரசறைந் தறிவிக்கும் இலக்கியங்களும்; சமத்துவம், சகோதரத்துவம், ஏகத்துவம் சமுதாயத்தில் நிலவப் பாடுபடும் இலக்கியங்களும், அழியாது பாதுகாக்கப் பெறும்.

முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியதாம், செந்தமிழ்க் காவியம் என்று செப்பப்படும் சிலப்பதிகாரம், அன்று நின்று நிலவிய சமுதாய சாதாரணக் குடிமகனான கோவலனின் உண்மைத் தன்மையையும், அழகு விளையாடும் ஆரணங்கான கண்ணகியின் நன்னிலைமையையும் விவரிப்பதுடன் சமூகக் கோட்பாடுகளையும், நடை உடை பாவனைகளையும் சொல்லா நிற்கிறது. தமிழர் அன்று நுண்மையைக் கருக் கொண்டு, நாகரிகச் சமுதாயத்தினராய் அன்பினுக்காகவும், அருளினுக்காகவும் வாழ் வாங்கு என்னும் அச்சம் தரும் இலக்கியமும், ஜெர்மானிய மொழியில் காதேயால் யாக்கப்பட்ட 'பாஸ்டு' என்ற பரிசுத்தக் காவியமும், வர்ஜில் என்ற பாவாணரால் இலத்தீன் மொழியில் வரையப்பட்ட 'ஈனிட்' என்ற இலக்கியச் சோலையும், ஆங்கில மகாகவிகளான சேக்ஸ்பியர், மில்டன், டென்னிசன், பைரன் முதலியோரால் வரையப்பட்ட காவிய, காப்பிய நூல்களும், முறையே அவ்வந்நாட்டு மக்களின் கலை ஓம்பும் பண்பு, பழக்க வழக்கங்கள், பழமை படிந்த கொள்கைகள், நடை உடை பாவனைகளை நமக்குத் தெற்றெனத் தெரிவிக்கின்றன. பரந்த இவ்வுலகப் பரப்பில் பல்வேறு எண்ணங்களைக்கொண்ட மக்கள் சமுதாயம் எவ்வாறு இலங்கிற்று என்பதைத்தான்

—10-ம் பக்கம் பார்க்க

காலங்கள் மூன்றில், கரு மூன்று; பொருள் மூன்று!

பாராட்டுக் கட்டுரை—2.
இரு கட்சி வாதங்களின் இறுதிக்கட்டுரையாக இந்த இதழில் 'ரஷ்யா முற்போக்குச் சக்திதான்' என்று வாதித்திருக்கும் கட்டுரை இடம் பெற்றிருக்கிறது. அடுத்த இதழில், இருசாராரின் வாதங்களுக்கும் அப்பாற்பட்ட சில உண்மைகளைக் கூறி 'இதுதான் ரஷ்யா' என்கிறார் வேறொருவர். [ஆ—ர்.]

யார் சொன்னது; முற்போக்குச் சக்திதான்!

— எழுதியவர் —
ஏ. இளமாறன்

உலகிலே ஈடு இணையற்ற இரு பெரும் வல்லரசுகளில் ஒன்றான ரஷ்யா, முன்னொரு காலத்தில் ஜெர்மனியின் ஒரு விரலசைவால் விழ்ச்சியுற்றது. ஆனால் இன்று முன்னைவிடப் பலமடங்கு பலம் பெற்ற அதே ஜெர்மனி இன்றைய ரஷ்யாவை அசைக்கமுடியுமா? ஏன், அவ்வாறு எண்ணிப்பார்க்கத்தான் முடியுமா?

முடியரசுக்கு முற்றுப்புள்ளியிட்டு விட்டுக் குடியரசாகக் கும்மாளமிடும் சிறிய பெரிய நாடுகள் அனைத்தும் ரஷ்யாவின் போக்கை உன்னிப்பாகக்கவனித்து வருவதன் காரணத்தை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். முற்போக்குச் சக்தியால் முன்னேற்றம் அடைந்திருக்கிறதா அல்லது ஏகாதிபத்தியத்தால் எழுச்சிபெற்றுத் திகழ்கிறதா என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

உருக்குலைந்து சின்னாபின்னமாகக் கிடந்த ஜாரிஸ்ட் சாம்ராஜ்யத்தை ரஷ்யத் தொழிலாளர்கள் ஆளத் தொடங்கியதும், எப்படி அவர்கள் எல்லோரும் ஒன்றாகப் பின்னிப் பிணைந்து நாட்டைப் பல துறைகளில் வளப்படுத்தியிருக்கின்றனர் என்பதையும், முன்னேறியுள்ள முதலாளித்துவ நாடுகளின் சக்திக்கு அப்பாற்பட்ட அவ்வளவு வேகமாக வளர்ந்து நாற்பதே ஆண்டுகளில் நானிலம் புகழத்தக்க வகையில் உயர்ந்து விளங்குகிறது என்பதையும், கட்சி வேறுபாடு- கருத்து மாறுபாடு இவைகளைக் களைந்துவிட்டு, நடுநிலைமைக் கண்ணோட்டத்தில் ரஷ்யாவை நோக்குவோமேயானால், உண்மையிலேயே அம் மாபெரும் வல்லரசு ஒரு முற்போக்குச் சக்தியாக ஒளிவீசி வழிகாட்டுவதை நாம் காணமுடியும்.

உலகத்தின் பல்வேறு முனைகளிலிருந்து ரஷ்யா சென்று திரும்பும் அரசியல் தலைவர்களும், நல்லெண்ணத் தூதுக்குழுக்களும், கலைஞர்களும் கவிஞர்களும், விஞ்ஞானிகளும், விவேகிகளும் ரஷ்யாவைப் பற்றி பலதரப்பட்ட கருத்துக்களை வெளியிடுகின்றனர். ஒரு சிலர் அச்சமும் ஆயாசமும் அடைகின்றனர்; வேறுசிலர் பொச்சரிப்பும் பொருமையும் கொள்ளுகின்றனர். ஆனால் பொதுவாக எல்லோருமே ரஷ்யாவின் ஆற்றலைப் போற்றுவதையும் வளர்ச்சியைக் கண்டு வியப்பதையும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

அவனிபுகழ் பவனிவரும் ஆசியாவின் ஜோதி அரும்பெரும் தலைவர் என்றெல்லாம் பாராட்டும் பதக்கமும் பெற்ற பண்டித நேருகூட ரஷ்யாவின் பெரு வளர்ச்சியைக் கண்டு வியந்திருக்கிறார்.

அங்குள்ள அணுகுண்டுத் தொழிற்சாலைகள் அவரை ஆச்சரியத்தில் மூழ்கடித்தன - மோட்டார் தொழிற்சாலைகள் அவரை மோகனப்புன்னகையில் ஆழ்த்தின. விஞ்ஞானக்கூடங்கள் அவரை வியப்பில் திளைக்கச் செய்தன. கதகளி கற்ற காரிகைகளும், பரதம் அறிந்த பாவையர்களும் அவர் கண்களுக்கு விருந்து தந்து களிகொள்ளச் செய்தனர் - இப்படியெல்லாம் ஏடுகள் எடுத்தியம்பின.

ரஷ்யாவின் வளர்ச்சி மிகச் சாதாரண வளர்ச்சி என்று அறுதியிட்டு எவரும் கூறிவிடமுடியாது. நாற்பது ஆண்டுகளுக்குள் வியக்கத்தக்க அளவில் விஞ்ஞானம் முதலிய எல்லாத் துறைகளிலும் வளர்ந்திருக்கிறது. ஒரு நாட்டு வரலாற்றில்-வளர்ச்சியில், 40 ஆண்டுகள் என்பது மிகக் குறுகிய காலம். எனவேதான் அறிஞர் பெருமக்கள் வானளாவப் புகழ்கின்றனர்.

"ரஷ்யா, உலகிற்கு சிறந்ததொரு பாடம் கற்பித்துள்ளது. ஏதுமில்லாததிலிருந்து இருபது வருட காலத்தில் ஒழுங்கான பொதுத்திட்டம் ஒன்று வகுத்தால் மாபெரும் கைத்தொழில் பலம் பெறவும் போர்க்காலத்திலாயினும், சமாதான காலத்திலாயினும் மனித வாழ்க்கைத் தரம் உயர்வடையவும், மனிதப் பண்பிற்கு வழிகோலவும் இயலும் என்பதை உலகிற்கு எடுத்துக்காட்டியுள்ளது ரஷ்யா" என்று பிரிட்டிஷ் அரசியல் நிபுணரான லார்டு பாவரிட்ஜ் பத்தாண்டுகட்கு முன்பு தனது கட்டுரையொன்றில் கூறியுள்ளார்.

ஒருநாட்டு முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைகளாயுள்ள வேதனையின் ஊற்றான வேலையில்லாத் திண்டாட்டம்-முடைநாற்றமடிக்கும் மூட நம்பிக்கை - தலைவிரித்தாடும் ஜாதி பேதம், இவை அத்தனையையும் களைந்தெறிந்துவிட்டு, ஊக்கத்தையும் உழைப்பையும் உறுதுணையாகக் கொண்டு ஆக்கவேலையிலே அறிவைச் செலுத்தியதால்தான், உலக நிலப்பரப்பிலே ஆறில் ஒரு பங்கு நிலத்திற்குரிய இருபதுகோடி ரஷ்யப் பெருமக்கள் இன்று உலக அரங்கிலே ஏறுநடை போட முடிகிறது.

ரஷ்யாவில் இரண்டாம் உலகப் பெரும் போரால் ஏற்பட்ட சேதம் மிக மிக அதிகமாகும். நகரங்கள் கிராமங்கள் உள்பட 70,000 தரை மட்டமாயின. 1700 நகரங்கள் ஓரளவு பாழாகிவிட்டன. 60,000,00 வீடுகள் இடிந்து நாசமாயின. 3000 தொழிற்சாலைகள் குண்டுகளால் தாக்கப்பட்டு நாசமடைந்தன என்று புள்ளி விபரம் கூறுகின்றது.

செல்வம் பெருகிட திட்டங்கள் குவிந்தன!

இத்தகு பெரு நாசத்தால் ஒவ்வொரு ரஷ்யனும் பாதிக்கப்பட்டிருக்கிறான். இதனால் ஒவ்வொருவனும் பெறற்கரிய செய்கையில் ஈடுபட்டதாகப் பெருமையடைகிறான். இந்தப் பெருமைதான் எல்லோரையும் அன்றுமுதல் இன்றுவரை ஒரு விசித்திர ஒற்றுமைக் கோட்டைக்குள் சிறைப்படுத்தியிருக்கிறது. இதைச் சிலர் தவறாகப் புரிந்துகொண்டு ரஷ்யர்களுக்கு முன்பிருந்த சர்வதேச உணர்ச்சி சாகடிக்கப்பட்டுவிட்டதென்றும், அதற்குப் பதில் ஏகாதிபத்திய உணர்வு எழுந்துவிட்டதென்றும் பறைசாற்றினர். ஆனால் ரஷ்யர்கள் தங்கள் நாடு பொதுவுடமை நாடு என்பதை அறிந்து தேசிய உணர்ச்சியுள்ளவர்களாய் இருக்கின்றனர்.

இந்தப் புத்துணர்வாலேதான் போருக்குப்பின் பிரான்சில் ஏற்பட்ட பிணக்குகளும், பிளவுகளும், கலகங்களும் காலித்தனமும் ரஷ்யாவில் ஏற்படவில்லை. இங்ஙனம் ரஷ்யர்களின் உள்ளத்திலே ஒற்றுமை உணர்வு சுரந்தெழுந்ததால், நாட்டின் புனர்நிர்மாண வேலைகளிலே நாட்டம் செலுத்த முடிந்தது.

புதிய மறுமலர்ச்சிப் பாதையின் வழியாக சுபிட்சத்தை நோக்கிச் செல்ல பல்வேறு திட்டங்களை உருவாக்கினர். அதன் முதல்படியாக 1927ல் புதிய பொருளாதாரக் கொள்கை ஏற்பட்டது. பின்னர் 1928-ல் முதல் 5 ஆண்டுத் திட்டம் வகுக்கப்பட்டது. படிப்படியாக அதன் பிறகு வகுத்த திட்டங்களை வெற்றியோடு பூர்த்திசெய்துவிட்டு, தற்சமயம் ரஷ்யா தனது 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது.

முதலாவது 5 ஆண்டுத் திட்டம் ஆரம்பித்தபோது அங்கு, விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில் இரண்டொரு தொழிற்சாலைகளே இருந்தன. ஆனால் இன்றைய நிலையில் ரஷ்யாவில் இரண்டு இலட்சத்திற்கு அதிகமான தொழில் நிலையங்களும் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட நிர்மாண வேலை அரங்கங்களும் இருப்பதாக சோவியத் அரசாங்க புள்ளி விபரம் தெரிவிக்கின்றது.

எல்லா வகையான தொழில் நிறுவனங்களையும் நிலத்தையும் அரசாங்கமே ஏற்று நடத்துகிறபடியால் தனிப்பட்டோர் எவரும் அங்கு சுரண்ட முடிவதில்லை. இந்த வகையில் பொருளாதாரத்தைத் திட்டமிட்டுப் பெருக்குவதில் ரஷ்யாதான் முதல் நாடாகும்.

சோவியத் திட்டம் புனையும் நிபுணர்கள் நித்தம் நித்தம் திட்டங்களைத் தீட்டிக்கொண்டேயிருக்கின்றனர். அவைகளை அரசாங்கம், தொழிலாளர்களின் துணைகொண்டு நிறைவேற்றுகின்றது. திட்டங்கள் நிறைவேறிய பின்னர் திட்டம் புனைந்தோர்க்குப் பரிசுகள் வழங்கி - பாராட்டிதழ் வாசித்து அவர்களை மேலும் மேலும் ஊக்குவிக்கின்றது. உயர்வை மதிப்பிடக் கூடிய கருவிகள் என்றெண்ணி அவற்றை ரஷ்யா எவ்வாறு திறமையுடன்நிறைவேற்றுகிறது என்பதைப் புள்ளி விபரத்தால் அறியலாம்.

பெரிய இயந்திரத் தொழிற்சாலைகளும், ஆலைகளும் மோட்டார் தொழில் நிலையங்களும்ஏராளமான அளவில் நிறுவப்பட்டிருக்கின்றன.

கூட்டுப்பண்ணைகளும், அரசாங்கப் பண்ணைகளும் நாட்டிற்குத் தேவையான விவசாயப் பொருட்களை அபரிமிதமாக உற்பத்தி செய்கின்றன. நபர்விகித உற்பத்தியை அதிகப்படுத்தி அமெரிக்காவை எட்டிப்பிடிக்க முயற்சிக்கிறது என்பதற்கு இதோ மற்றொரு புள்ளி விபரம்.

தொழில்கள் பெருகி வருவதால் தேசிய வருமானம் அதிகரிக்கிறது. அதனால் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்கிறது. சோவியத் நாட்டின் வருமானம் 1913-ல் இருந்ததைவிட 1954-ல் 14 மடங்கு அதிகரித்தும் 1955ல் முந்திய ஆண்டைவிட 10 சத வீதம் அதிகரித்துள்ளது.

பொருள்களின் உற்பத்தி அதிகமாக, அதிகமாக பொருள்களின விலைகள் குறைக்கப்பட்டு வந்திருக்கிறது. 1947 முதல் 1957 வரை ஏழு தடவைகள் பொருள்களின் விலைகள் வெகுவாகக் குறைக்கப்பட்டிருக்கின்றன.

"தொழிலாளிகள் உழவர்கள் இவர்களின் சக்திதான் உலகிலேயே அதிசயிக்கத்தக்கதொன்றாகும். இந்த சக்தியே சமுதாய மாற்றங்களை ஏற்படுத்தி சிறுகச் சிறுக வளமாக வாழவைக்கும்" என்று பொதுவுடமைக் கட்சியின் தந்தையான லெனின் கூறியதைப் பின்பற்றும் வகையில் தொழிலாளர்களுக்கு எல்லாத் துறைகளிலும் போதிய வசதியளித்தது. ஆக்கவேலையிலே ஊக்கமூட்டி வருகிறது ரஷ்யப் பேரரசு.

ஏறத்தாழ 25 ஆண்டுகட்கு மேலாகவே ரஷ்யாவில் வேலையில்லாத் திண்டாட்டம் இல்லை என்று துணிந்து கூறலாம். நமது நாட்டில் வேலையில்லாத் திண்

— 11-ம் பக்கம் —

செயலில் காட்டிட சீலர்கள் முனைந்தார்கள்!

“போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன்!”

எண்ணம்
கண்ணதாசன்
மலர் 4 ‖ 24—8—57 ‖ இதழ் 8

‘வயது நூற்றெழுபத்தைந்து!”

‘இந்தியசு தந்திரத்தின் வயதைக் கேளீர்!
இன்றோடு நூற்றாண்டு முடிந்த’ தென்றே
மந்திரிகள் சொன்னார்கள்! ‘ஆட்டு மந்தை
மக்கள்’ அதைத் தலையாட்டி ஆமென் றார்கள்!
தென்திசையில் போராடி மறைந்த வீரர்
தீரத்தைப் புகழ்ந்தோர்கள் யாரும் அங்கே
இந்நாட்டு விடுதலையின் வயது நூற்று
எழுபத்தைந் தென்பதனைச் சொன்னா ரில்லை!

நானாவும் லட்சுமியும் தாந்தி யாவும்
நாடாளும் ஆசையினால் துடித்த தைத்தான்
‘மூ’னாக்கள் சுதந்திரநா ளென்கின் றார்கள்
முன்னாளில் தன்நாட்டின் மானங் காக்க(த்)
தேனாறும் மனையாளைச் சேயை நீங்கித்
திரித்தாரைத் திரப்போர் புரிந்த பேரை
‘நானா’ற்றுப் புகழ்பாடும் தமிழர் தம்மை
நலம்பாடி வாழ்த்திடஓர் நாதி இல்லை!

மண்மூடிப் போனதொரு பழைய் காதை
மானத்தின் ஈடாகும்! தமிழர் நாட்டில்
வெண்மேனிப் பிறநாட்டார் புரிந்த கொள்ளை
வேரோடு சாய்த்தாரின் வீரம் பாடும்!
கண்மூடிப் போனார்கள் அவர்க ளென்றால்
காலமுமா மூடிவிடும்? அணுக்கள் தோறும்
பண்பாடும் பாஞ்சாலங் குறிச்சி நாட்டின்
பார்புகழும் நிகழ்ச்சிகளின் தேதி யாதாம்?

ஆயிரத்தி எண்ணூற்றி ஐம்பத் தேழில்
ஆர்ப்பாட்டம் புரிந்ததெலாம் இரண்டாம் கட்டம்!
பாயிரத்துப் போர்ளங்கள் தமிழன் செய்த
பாஞ்சாலங் குறிச்சிப்போர்! அதை மறந்தார்!
நோய்பிடித்த தமிழ்மகனே! நீயும் சேர்ந்து
நூற்றாண்டு விழாப்பாட்டுப் பாடு கின்றாய்!
பாய்போட்டுத் தூங்கிடும்நீ எழுவ தெல்லாம்
பரத்தைக்கு முடிசூட்டிப் பார்க்கத் தானோ?

புளிக்கொம்பில் தொங்கியவன் புகழும், பின்னர்
புகழ்கொண்ட ‘துரை’பேரும், கிளர்ந்தெ ழுந்தே
“வழிஈது! செல்!”கென்றே வெள்ளை நாயை
வாளாலே ஈர்ந்திட்ட மருது மன்னர்
எழிற்பேரும் தமிழ்ராணி வேலு நாச்சி
ஏருகிப் போர்செய்த கதையும், திப்பு
வழிவந்த சீராளர் வேலூர் நாட்டில்
வாள்கொண்டு மோதியதும் எந்த நாளில்?

ஆயிரத்தி எண்ணூறும் அதற்கு முன்பும்!
ஆங்கிலர்கள் குறிப்பேட்டைப் படித்துப் பாரீர்!
தோய்ந்ததொரு தமிழ்ரத்தம் மறைந்த பின்பே
தூங்கிவிட்ட வடநாட்டார் துடித்தெ ழுந்தார்!
தாய்பெற்ற புகழறியாத் தமிழ மாந்தர்
தாமும்போய் ‘நூற்றாண்டு’ என்கின் றாரே!
சேய்,தந்தை புகழுக்கு நமனாய் வந்தால்
சிறுநாயும் மதிக்காது! மதிக்க வில்லை!

எந்தெந்த வழிகளிலோ தமிழன் தேய்ந்தான்!
எங்கெங்கோ கிடந்தவர்கள் ‘வீர’ ரானார்!
பந்தாகி உதைபட்டுத் திரிவ தற்கே
பாழான தமிழ்அன்னை மகனைப் பெற்றாள்!
சந்தோடு போனாரும் வரலா றேறிச்
சதிராடு கின்றார்கள்! வருவார்க் கெல்லாம்
முந்தானை விரித்தாண்ட டில்லிப் பாவை
முழங்குகிறாள்! தமிழ்ப்பிள்ளை முனகு கின்றான்!

அணுவெங்கும் வேல்கொண்டு தாக்கி னால்
அவதியுற மாட்டோம்நாம்! சரித்தி ரத்தின்
அணுவெல்லாம் நிறைகின்ற தமிழன் பேரை
அழிக்கின்ற செயல்கண்டு துடிக்கும் நெஞ்சம்!
‘பணிவாலே புகழ்மாயும்’ என்ப தைத்தான்
பார்க்கின்றோம்! ஒருநாடாய் வாழ்வ தாலே
அணுவேனும் நமக்குமரி யாதை உண்டா?
அறிவுடையோர் மறுமுறையும் நினைவிற் கொள்க!

வரலாற்றில் இடமில்லை; அஞ்சல் கூட்டில்
வடிக்கின்ற தலைகளிலும் நம்மோ ரில்லை!
பொருளாதா ரத்தினிலும் தேய்ந்த வாழ்க்கை!
புவியாளும் முழுஉரிமை பெற்றா லன்றி
இருள்சூழும் தமிழ்நாட்டை! விரைவி லேயே
இதுகாண்போம்! பெரியோரே! தமிழ நாட்டீர்!
அருளாலே உலகாளும் ஆதீ னங்காள்!
‘அஞ்ஞான’ச் சிறுவனிவன் சொல்லைக் கேளீர்!

“மேருமலை யவ்வளவு பெருமை பெற்றார்,
மேனாட்டார் விருந்துக்கே உடலெ டுத்தார்,
நேருபிரான்” என்பதையே பாடிக் கொண்டு
நெளியாதீர்! ‘பந்து’களின் சதையைப் பார்த்து
சூரரெனப் புகழாதீர்! கோடு போட்டுத்
துடுக்கடக்கிப் புகழ்பாட வாரீர் வாரீர்!
ஆறிவரும் காலமெலாம் அழியுங் காலம்!
‘அடிஉதைகள்’ கொடுப்பதுதான் பிழைக்குங் காலம்!

துணைக்கண்டம் இதுவென்போம்! ஒருநா டென்றால்
தொண்ணூறு யிரம்பேதம் எவ்வா றென்போம்!
பிணைக்கின்ற கயிறுகளை அறுப்போம்! இந்திப்
பேதையரை எல்லைவரை உதைப்போம்! சொல்லைக்
கணையாக்கி எறிவோம்!போ ராட்ட மென்னும்
களப்பாட்டில் குதிப்போம்நாம் பழைய நாளில்
இணைவோம்!இம் முயற்சிகளில் மடிய நேர்ந்தால்
‘எந்நாடே வாழ்க!’வென உரைத்தே செல்வோம்!

இனிப்பொறுக்க நேரமில்லை! பொறுமை யெல்லாம்
இழப்புக்கே வழியாதல் கண்டு கொண்டோம்!
கனிவேண்டும்! நம்நாடு நமக்கே யாகும்
காலந்தான் இனிவேண்டும்! அன்னை, பிள்ளை
துணைவேண்டும்! பிறநாட்டில் வாடு வோரின்
துயர்தீர்க்கும் வழிவேண்டும் நமக்குள் நாமே
இணைகின்ற அரசொன்றே வேண்டும்! ஈது
இல்லையெனில் சாவொன்றே வேண்டும்! வேண்டும்!

★ பன்மொழிப்புலவர் பொன்விழா ★

பேரன்பு கொண்டோரே! பெரியோரே!
தமிழுக்கு நிதி! தமிழின் உயிருக்கு நிதி!

வறுமையில் வாடும் மாபெரும் புலவருக்கு, உயிருள்ளபோதே மரியாதை!
வேகம் போதாது; வெள்ளிப்பணம் குவியட்டும்!
அள்ளி அனுப்புங்கள்; அத்தனையும் தமிழ் காக்கும்!



கா. அப்பாதுரையார் - பன்மொழிப் புலவர். பல துறைகளிலும் பலருக்கும் வழிகாட்டியாக அமைந்தவர். அவரது சொல்லும், செயலும் தமிழுக்கே பயன்படுவன. வாழ்வும், வழியும் தமிழருக்கே உரியனவாய்த் திகழ்வன.

அவர் படிக்காத நூல்களில்லை. ஆராயாத பொருள் தமிழில் இல்லை. பலர் பயந்து தொட நடுங்கும் இடங்களைத் தொட்டவர் மட்டுமல்ல— அவற்றைத் தூய்மைப் படுத்தியதிலும் அவரது பங்கு அதிகம். தமிழ் படித்து, பட்டம் பெற்று, பலராலும் பாராட்டப் பெற்றுத் திகழ்கிறவர்கள், பொதுவாழ்வில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதில்லை. அவர் அவர்களுக்கு எதிர்க்கட்சியாய் அமைந்தவர். தமிழ் படித்தவர் - அதனாலேயே தமிழர் நலம் பேணத் துடித்தவர். இலக்கியங்களை ஆராய்ந்தவர்-அது காரணமாகவே இனவளர்ச்சிக்குப் பாடுபட்டவர். மொழி பல அறிந்தவர்-அதனாலேயே மொழிகள் குல முதல்வியாம் தமிழன்னையின் இழிநிலை கண்டு, அவளின் உயர்வு நாடி உழைத்தவர்.

தடியடியா?
சிறை வாழ்வா?
தாங்கொணா வசைச் சொற்களா?

எதையும் தாங்கும் இதயம் தமக்கு உண்டு என்பதைத், தம் வாழ்வில் பலமுறை நிரூபித்தவர்.

சாப்பிடுதற்காக வாழ்பவர்கள் உலகில் பலர். வாழ்வதற்காகச் சாப்பிடுபவர்கள் மிகச் சிலர். அந்த மிகச் சிலரில் குறிப்பிடத் தக்கவர் அவர்.

அவர் இந்தி மொழியில் பட்டம் பெற்றவர். எனினும், இந்தி தமிழகத்தில் நுழைவதை எதிர்த்துக் கச்சை கட்டி நிற்பவர். இந்தியின் தகுதியின்மையை எடைபோட்டுக் காட்டி, அதன் ஏகாதிபத்திய எண்ணத்தை ஒழிக்க முனைபவர்.

அவர் ஆங்கிலத்திலும் பெரும் புலவர். அண்டை மொழிகளாம் மலையாளம், தெலுங்கு இவற்றை அறிந்தவர். ஆரிய மொழியாம் வடமொழியையும் படித்தவர். அவர் நமது கன்னித் தமிழ்மொழி நலம் பேணுபவர். வழிமுறை வாழ உழைப்பவர். விழிகளின் இமைப்பெல்லாம் தமிழுக்கே, தமிழருக்கே, தமிழகத்துக்கே என விழுந்து விழுந்து பணியாற்றுபவர்.

அவர் எழுதிய நூல்கள், கருத்துக்குவியல்கள். அவர் எழுதிய வரலாறுகள், கண்ட ஆராய்ச்சி முடிவுகள் பலரைப் புலவராக்க உதவியிருக்கின்றன. அவரிடத்தில் கற்றவர்கள், தமிழ் வாழும் இடங்களிலெல்லாம் வாழ்கிறார்கள். அவர் ஒரு புதிய தமிழர் சமுதாயத்தின் தந்தை. அவருக்குப் பின்னே அவரது மாணவர்கள் மட்டுமே அணிவகுத்தால், அந்த அணிவகுப்பு தமிழர் தலைவர்களின் அணிவகுப்பாக அமையும். அவரிடத்தில் கற்றவர்கள் பலர், தமிழை ஆள்கிறார்கள்; தமிழகத்தை ஆள்கிறார்கள்.

எல்லோரும் போற்றுகிறார்கள் அவரை.
எல்லோருக்கும் தெரிகிறது அவரது தனிச்சிறப்பு.
எல்லோரும் கண்டு வருந்தும் நிலையிலேயே அவரது நிலை உள்ளது.

எல்லோருக்குமே அதனை மாற்றி அமைக்க வேண்டும் எனும் எண்ணம் உண்டாகியிருக்கிறது.

அவர் வதைபட்டால் தமிழ் வதைபடுகிறது. வறுமை அவரைத் தாக்கும்போது, தமிழே தாக்கப்படுகிறது.

அவர் வாழ்ந்தால் தமிழ் வாழ்கிறது. அவர் சிரித்தால் தமிழ் சிரிக்கிறது. அவரது பேச்செல்லாம் தமிழர் நலம். மூச்செல்லாம் தமிழ்நாட்டின் உயர்வினுக்கு. கை, வீச்செல்லாம் தமிழருமை பேணுதற்கு. ஆமாம், அவர் தமிழர்க்கே 'அப்பா!' எதைப்பற்றிய ஐயம் தமிழில்? அவர் இருக்கிறார், அதனைத் தெளிவுபடுத்த.

அவர் நினைத்திருந்தால் இன்று 'அரச வாழ்வு' வாழமுடியும். மற்றவர்கள் தம் போக்கில் கூறுகிற கருத்துக்களை ஆதரிக்கவேண்டியதில்லை; எதிர்க்காமலிருந்துவிட்டால் போதும். அவரை 'இந்திரன்', 'சந்திரன்' என்று பேச, எத்தனையோ பேர் காத்திருக்கிறார்கள். மாளிகை வாசியாக, மற்றவர்கள் பற்றிய அக்கரை அற்றவராக கொஞ்சம் மனது வைத்து அவர் மாறியிருந்தால், ஆட்சியிலிருப்பவர்கள்! அளிக்கும் பட்டங்கள், பதக்கங்கள் அவரது வீட்டை நிரப்பியிருக்கும். ஆனால் இன்றோ, புலவர்களுக்கே வழக்கமான வறுமை அவரைப் படாதபாடு படுத்துகிறது. எப்பொழுதும் தொல்லை! விடாத கவலை! இவை நீங்கி அமைதியாக இருக்க வழி ஏற்பட்டால் இன்னும் அற்புதமான பல இலக்கியச் செல்வங்களை, வரலாற்று ஆராய்ச்சி நூல்களை, தமிழ் பெற முடியும்; தமிழகம் பெறமுடியும். தமிழர்கள் தம் சொத்துக்கள் அவை என்று மகிழ முடியும்.

பொதுச்செயலாளர் அறிக்கை வந்துவிட்டது. நாவலர் அவர்களின் அந்த அறிக்கை, பன்மொழிப்புலவர் யார் என்பதை நாட்டுக்குத் தெளிவுபட அறிவித்திருக்கிறது.

பொன்விழாக் குழு உருவாகிக் கொண்டிருக்கிறது. இதுவரை திருவாளர்கள் **பி. டி. இராசன், கி. ஆ. பெ. விசுவநாதம், பி. இரத்தினசாமி, ஏ. வி. இராமன், ஏ. வி. மெய்யப்பன், அ. க. தங்கவேல், எஸ். பெருமாள், நா. பாண்டுரங்கன், ம. கி. சண்முகம், அலெக்சாண்டர் ஞானமுத்து, திருமதி எஸ். கே. ஜெகதீஸ்வரி** ஆகியோர், குழுவில் உறுப்பினராகப் பணியாற்ற ஒப்புதல் தெரிவித்துள்ளார்கள். மற்றும், தமிழகத்தின் பல்வேறு துறைகளில் பணியாற்றும் பெருமைக்குரியவர்கள் பலரும், குழுவில் அங்கம் வகிக்க இருக்கின்றனர்.

நிலைமை புரிகிறது.

நிதி வருகிறது.

பலர் அனுப்புகிறார்கள்.

என்றாலும் வேகம் போதவில்லை!

வீட்டுக்கொரு பிள்ளை வேண்டுமென்பர் போருக்கு. தமிழரின், தமிழின் எதிரிகளை எதிர்க்கும் போர்த்தலைவர் அவர்! அவருக்குப் பொன் விழா. அவரது வாழ்வு வளம்பெற நிதி! வீதிக்கொரு பொன்முடிப்பாவது அளிக்கப்பட வேண்டுமல்லவா? அனுப்பி வைக்க வேண்டியது தமிழர் கடமை அல்லவா?

தமிழை எண்ணிக்கொள்ளுங்கள்.

அப்பாதுரையார் கண்முன் வருவார்!

அவரை நினைத்ததும், அவரது வறுமை தெரியும்.

அந்த வறுமையை நீக்கும் வழி உங்களுக்குத் தெரிந்ததுதான்.

தமிழுக்கு வாழ்கிறவர் அவர். அவர் வாழ அள்ளிக் கொடுங்கள் நிதி!

அந்த உங்களின் பொன்னான நிதி உதவியை, எதிர்பார்க்கிறது பொன்விழாக் குழு. பொன்விழாக் குழுவின் விருப்பம் தமிழ்ப் பொது மக்களின் விருப்பம். தமிழ் நிலத்தின் முன்னேறும் பிள்ளைகளின் உள்ளபூர்வமான ஆசை. இதயத்திலிருந்து எழும் வேண்டுகோள்.

உடனே அனுப்புங்கள்! ஓரணா, இரண்டணா, ஒரு ரூபாய், இரண்டு ரூபாய், ஐந்து ரூபாய், ஆயிரம் ரூபாய்! எவ்வளவு தந்தாலும் தகும், அந்த எண்ணங்கள் மலரும் சோலையாம் இலக்கியப் பேராசிரியரின் பொன்விழாவுக்கு!

நிதி குவியட்டும்! உடனே, உடனே!

நிதி அனுப்பவேண்டிய முகவரி:

சி. என். அண்ணாதுரை, எம். ஏ,
பொருளாளர்,
பன்மொழிப்புலவர் பொன்விழா,
'அறிவகம்'
24, சூரியநாராயண செட்டி தெரு,
சென்னை-13.

ஆகஸ்ட் பதினைந்து!

எழும்பூரிலிருந்து புறப்படும் எக்ஸ்பிரஸ்களில் பிரயாணம் செய்யும்போது ஏற்படுகின்ற மகிழ்ச்சி, உரிமை உணர்ச்சி, சென்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து கிளம்பும் வண்டிகளில் போகும் போது ஏற்படுவதில்லை. அதுவும் ஜனதா எக்ஸ்பிரஸ், கல்கத்தா மெயில்-இவைகளைச்சொல்லவே வேண்டாம். கூச்சல்! கும்மாளம்!! ரகளை!! அதில் பிரயாணம் செய்யும் தமிழன் எவனும் அந்தக் கரைச்சலைத் தாங்க முடியாது. நானும் இதுவரை எத்தனையோதடவை கல்கத்தா மெயிலில் போயிருக்கிறேன்; நாணமைல் கூட என்னுல் பொறுமையாக இருக்க முடிவதில்லை. பெட்டியில், மூட்டைப்பூச்சி அடைந்து கிடப்பதைப்போல் பிரயாணிகள் அடைந்து கிடப்பார்கள். மேலே, '**சாமான்களுக்கு மாத்திரம்**' என்று போடப்பட்டிருக்கும் தட்டுகளில் யாராவது இரண்டுமார்வாடிகள்படுத்திருப்பார்கள். அந்தக் காட்சியை உருவகப்படுத்திப்பார்த்தால் நான்கு ஐந்து தவளைகளை விழுங்கிவிட்டு நகரமுடியாமல் தத்தளிக்கும் மலைப் பாம்பைப்போல் மனதில் படும். கீழே இவ்வளவு பேர் அவதிப்படுகிருர்களே, அவர்களுக்குக் காற்ருவது கிடைக்கட்டும் என்று அந்தப் 'பாம்பு மனிதர்கள்' எண்ணுவதில்லை. தலைக்கு மேலே சுற்றிக்கொண்டிருக்கும் மின்சார விசிறிகளையும் ஆளுக்கொரு பக்கமாகத் திருப்பிக்கொண்டு விடுவார்கள். அடியிலே கிடந்து அல்லலுறும் 'வீரத் தமிழர்கள்' அண்ணுந்து பார்ப்பார்கள். 'கனகனும்' 'விசயனும்' இராமேஸ்வரத்துப் பெருமை பற்றியும், மதுரையின் மாண்பு குறித்தும், காஞ்சியின் சிறப்பை எடுத்தும் அவர்களுடைய 'ஹை' மொழியில் பேசிக்கொண்டிருப்பார்கள். அண்ணுந்து பார்க்கும் 'சேர சோழ பாண்டியர்'கள் அவர்களுடைய வாய்களையே பார்த்துக்கொண்டிருப்பார்கள். கல்கத்தா மெயில் ஏற்பட்ட காலத்திலிருந்து இந்தக் காட்சி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதான் வருகிறது.

இந்த வயிற்றெரிச்சலைத் தாங்க முடியாது என்பதற்காகவே, அன்று நான் முதல் வகுப்புப் பெட்டிக்கு டிக்கட் வாங்கினேன். அந்தப் பெட்டியில்என்னைச் சேர்த்து ஆறு பேர் தான் இருந்தார்கள். அதுவே அளவுக்கு மிஞ்சியதுதான். வண்டி சென்னை எல்லையைக் கடக்கும்போது சரியாக மணி ஒன்பதாகி விட்டது. இரவுநேரத்தில் தூரத்தில் இருந்து சென்னையைப் பார்க்கும்போது தமிழன் என்ற உணர்ச்சி எங்கிருந்தோ தானுக ஓடி வந்து விடுகிறது. இவ்வளவு அழகான நகரத்திற்குச் சொந்தக்காரர் நாம்தான் என்ற பெருமை இதயத்தில் எழும்புகிறது.

வண்டி நெல்லூர் ஸ்டேஷனுக்குள் நுழையும் போது இரவு மணி பன்னிரெண்டாகிவிட்டது. அதுவரை நான் என்னுடைய பெட்டியைப் பற்றியே நினைக்கவில்லை. இயற்கை அழகை குறைத்துக் காட்டும் செயற்கை ஜோடனைகளில் மூழ்கித்திளைத்த இரண்டு இளம் பெண்கள், அந்தப் பெட்டியின் ஒரு பக்கத்தில் இருந்தார்கள். அவர்களுக்கு எடுபிடியாக ஒரு ஆடவர் வந்திருந்தார். அவர் பொறுப்பில் ஒரு தோல் பெட்டியும் வேறு சில சில்லறைச் சாமான்களும் விட்டு வைக்கப்பட்டிருந்தன. அந்த ஆசாமியை அந்தப் பெண்கள் முறையாகவே நடத்தவில்லை. அவரைக் கேலி செய்வதும், பேச வைத்து வேடிக்கை பார்ப்பதுமாகவே இருந்தார்கள். எனக்கு பரிதாபமாகத்தான் இருந்தது. ஏன், வெட்கமாகக் கூட இருந்தது. ஆனல், அவருக்கு இன்பமாக இருக்கும்போது யார் வெட்கப்பட்டு என்ன பயன்?

பெட்டியின் இன்னொரு பக்கத்தில் கிழவி ஒருத்தி சாய்ந்து கொண்டிருந்தாள். உலகத்தின் பிரிவு உபச்சாரத்தையும், இடுகாட்டின் அன்பழைப்பையும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்ட முதுமைக் கோலத்தில் அவள் காணப்பட்டாலும், அவளுடைய ஒளி இழந்த விழிகளில் மிகப் பெரியதொரு துன்பக் கதை இழையாடிக் கொண்டிருந்தது. அந்தக் கிழவிக்கு துணையாக ஒரு இளைஞன் வந்திருந்தான். அவனுக்கு பதினறு வயதுக்குமேலிருக்க நியாயமில்லை. அவனுடைய மாப்போன்ற முகமும்,பட்டுமயிர் மீசையும் தடாகத்துப் புதுத் தாமரையை நினைவூட்டின. கிழவிக்கு அவன் பேரனுக இருக்க வேண்டும்; அல்லது தூரபந்துவாக இருக்க வேண்டும். அந்த வாலிபன் கையில், பண்டித ஜவஹர்லால்நேரு அவர்கள் எழுதிய புத்தகமொன்று இருந்தது. அதை அவன் பாதிதான் படித்திருந்தான். வண்டி ஓடிக்கொண்டிருந்தது. வாலிபத்தை சதம் என்று எண்ணிய அந்தக் குமரிப் பெண்கள்; தென்றலில் ஆடும் முல்லையைப் போல தூங்கி விழுந்துகொண்டிருந்தார்கள். கிழவி முகத்தை மூடிய வண்ணம் தூங்கினுள். வாலிபனுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. புத்தகத்தை வேகமாகப் படித்துக் கொண்டிருந்தான். நான் என்னுடைய இளமைக் கால அசட்டுக் காரியங்களை எண்ணி மெய் வருந்திக்கொண்டிருந்தேன். பெற்றோரின் சதியால் ஒரு ஊமைப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு, பின் அவதிப்பட்டு 'அய்யோ' என அலறியடித்து ராணுவத்திலே சேர்ந்த சர்க்கஸ் புலியல்லவா நான்!

வண்டி, காலை இளம்பரிதியை பெஜவாடாவில் சந்தித்தது. சிற்றுளிபோல் மூக்கைத் துளைத்த தெலுங்குச் சீமையின் மிளகாய்ச் சட்டினியின் காரமான வாடை வண்டிக்குள் இருந்தோரின் தலைகளை வெளியே இழுத்து உலுப்ப ஆரம்பித்தது. நான் இருந்த பெட்டியில் அந்த வாலிபனைத் தவிர அத்தனைபேரும்கண் விழித்துக்கொண்டார்கள். கிழவிகூடச் சுறுசுறுப்பாகக் காணப்பட்டாள். ஆனல் அவளது ஆட்டமும் குதிப்பும் இயற்கையான சுறுசுறுப்பாகத் தெரியவில்லை. என்னைப் போலவே அந்தக் குமரிப் பெண்களும் கிழவியின் பரபரப்பில் சந்தேகப்பட்டார்கள். நேரம் செல்லச் செல்ல, கிழவியின் ஆர்ப்பாட்டம் அதிகரித்தது. தானுகச் சிரிக்க ஆரம்பித்தாள். சிரிப்பா அது! கோரப்! உள் நாக்கு ஓட்டைப் பல்-எல்லாம் தெரியும்படி வாயைத் திறந்து திறந்து மூடினள். அந்தக் கிழவிக்குக் குமரிப் பெண்களைப் பார்ப்பதற்கு எரிச்சலாகவே இருந்தது. முறைத்துப் பார்த்தாள்; முணுமுணுத்தாள்.

"என்ன பாட்டி, உடம்பு சரியில்லையா?"-என்றுள் ஒரு துடுக்குக்காரி.

"எனக்கா சரியில்லை? நல்லாருக்கு!" என்று பொக்கைவாய் திறந்து பலமாகச் சிரித்தாள் முதுகிழவி.

தமிழ்நாட்டில், 'பைத்தியம்' என்று சொல்வதற்குப் பதிலாக கௌரவம் என்ற போர்வையை மூடி 'பித்தக் கோளாறு' என்று சொல்லிக் கொள்வார்கள். மேன்மை தங்கிய அந்தப் பித்தக் கோளாறுதான் கிழவியை ஆட்டிப் படைக்கிறதென்பதே எங்கள் பெட்டியின் 'மெஜாரிட்டி' அபிப்பிராயமாகிவிட்டது.

வண்டி ராஜமகேந்திரம் போய்ச் சேருவதற்கும் தூங்கிய வாலிபன் எழுந்திருப்பதற்கும் சரியாக இருந்தது. அப்போது மணி ஒன்பதேமுக்கால். முடுக்கி விட்ட இயந்திரத்தைப்போல் 'கிடுகிடு'வென்று வேலைகளைப் பார்க்கஆரம்பித்தான். கிழவிக்கு காபி வாங்கி ஊற்றினன். பழம் வாங்கித் தந்தான். கிழவி, பழங்களைத்தின்று கொண்டே சிரித்தாளா அல்லது சிரித்துக் கொண்டே தின்ருளா என்று புரியவில்லை.

அவளுடைய வாயசைப்பை எவ்வளவு நேரம்தான் பார்த்துக் கொண்டிருப்பது என்று எண்ணி கிழே இறங்கி கொஞ்சநேரம் நடைபோட்டுக் கொண்டிருந்தேன். மறுநாள் விடிந்தால் சுதந்திர தினமாகையால் எல்லாப் பத்திரிகைகளின் சிறப்பு இதழ்களும், மலர்களும் காலைநேரத்து இட்லியைப்போல் மாலைநேரத்து மல்லிகைபோல் விலையாகிக் கொண்டிருந்தன. எனக்குப் பிறகு சிறிதுநேரம் கழித்து, குமாரிகளின் எடுபிடியாள் இறங்கினர். எனக்கு அவர் முன்பின் அறிமுகமானவராக இல்லாவிட்டாலும் தமிழரல்லவா ! பாழாய்ப் போன சொந்தம்தான் வந்துவிடுகிறதே!

"ஏன் சார் நீங்கள் எங்கே போகிறீர்கள்?" என்றேன்.

"கல்கத்தாவுக்கு" என்ருர் அவர்.

"அவர்கள்?" என்று அந்தப் பெண்களைப் பார்த்து, எனது முகவாய்க்கட்டையை நீட்டினேன்.

"அவர்களும்தான் ! கல்கத்தா தமிழ்ச் சங்கத்திற்கு சுதந்திரதின விழாநிகழ்ச்சிக்குப் போகிறோம்" என்ருர் அவர்.

"அப்படியா? நூற்றாண்டு விழா நிகழ்ச்சிக்கா? என்ன சொற்பொழிவாற்றப் போகிருர்களோ?" என்றேன்.

அவர் சிரித்து, "நீங்கள் ஒரு பக்கம்! பாட்டுக் கச்சேரிக்குப் போகிறோம்" என்ருர்.

அவருடைய பேச்சிலிருந்து அந்தச் சீமாட்டிகளுக்கும் தேசத்திற்கும் துளிகூடச் சம்பந்தமில்லையென்று தெரிந்தது. அவர்கள் கலை கலைக்காகவே எனப் 'பாடு-படும்' கலைவாணிகள் ! அவ்வளவுதான் ! வருமான வரியின் தொல்லைகள் அவர்களுக்குத் தெரியுமே தவிர, அந்த வரி யாருக்குப் போய்ச் சேருகிறது என்பதைக்கூடத் தெரிந்து கொள்ள விருப்பமில்லாத மின்மினிப்பூச்சிகள்.

முதல் மணி அடித்தாகி விட்டது. சிகரெட் துண்டைத் தூக்கி எறிந்துவிட்டு, வண்டியில் ஏறத்தயாராக நின்றேன்.

நான் அந்த ஆசாமியை இவ்வளவு தூரம் விசாரித்தும் அவர் என்னைப் பற்றி ஒரு வார்த்தை கூடக் கேட்கவில்லை. அந்தக் கிழவியைப்பற்றித்தான் விசாரித்தார்.

"ஏன் சார் அந்தக் கிழவி யாராக இருக்கும்? சாகப்போகிற காலத்திலே இப்படிச் சதிராடுதே! பைத்தியமா இருக்குமோ? பையன், பாவம்! அவதிப்படுகிறுன்" என்று அவர் அனுதாபப்பட்டார்.

"எனக்குக்கூட ஒன்றும் புரியவில்லை. அந்தப் பையனைத்தான் விசாரிக்க வேண்டும்" என்றேன்.

வண்டி புறப்பட்டுவிட்டது. நாங்களும் தொத்திக்கொண்டோம்.

★ தென்னரசு ★

— 10-ம் பக்கம் —

பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார், எம். ஏ., எல். டி,

பதில் தருகிறார்

மணிமாறன், திருச்சி.

(அ) இலக்கியம் ஏன் வரையறுக்கப்பட்டது? எந்தக் காலத்தில்? எவரால்?

(ஆ) கலித்தொகை ஆசிரியர் ஒருவரா? ஐவரா? சான்றுடன் விளக்கவும்.

(இ) கைம்மை நோன்பு தமிழிலக்கியங்களில் வருகிறதே அதன் பொருள் யாது? இவ்வழக்கம் நமது தமிழகச் சமூகத்தில் பண்டுதொட்டே இருந்து வருகிறதா?

(அ) அது உயிர் வளர்ச்சி. யாராலும் வரையறுக்கப்படவும் இல்லை. திடுமென வளரவும் இல்லை. மக்களிடை வழங்கிய நாடோடிப் பாடல்கள், வீரகாதைகள், விழா நிகழ்ச்சிப் பாடல்கள், விழா நாடகங்கள், வீர வழிபாடு ஆகியவற்றிலிருந்து தோன்றிற்று. வணிகர்கள் அல்லது புரோகிதர் எண்ணும் எழுத்தும் வகுத்துக்கொடுத்தபின் படிப்படியாக எழுதப்படும் இலக்கியமும், அதன்பின் இயல் கலைகளும் எழுந்தன.

மற்ற இனங்களில் இவை இப்போது தோன்றின, எப்படி வளர்ந்தன என்று ஒருவாறு கூற வழி உண்டு. ஆனால் தமிழினம் நாலாயிர ஆண்டுகட்கு முன்னும் கிட்டத்தட்ட இன்றைய நாகரிக உலகைப் போல, பல கூறுகளில் இதைத் தாண்டி மிகுதியாக வளர்ந்திருந்தது. ஆகவே உலக நாகரிகத் தொடக்கத்தைத் தமிழகத்தில் காணமுடியுமளவு நாம் தமிழ் நாகரிகத் தொடக்கத்தைக் காண வழியில்லை. எப்போது, யாரால் என்ற கேள்வியைத் தமிழர் கண்டு கூறுவது அரிதினும் அரிது. ஆனால் எப்படி என்னும் கேள்விக்கு மட்டும் அணிமையில் தொடங்கிய பிற இன நாகரிகத் தொடக்க நிலைகள் ஓரளவு விளக்கமளிக்க முடியும்.

தொல்காப்பிய காலத்திலேயே தமிழர் இன்றைய மேல்நாட்டினரும் நாமும் இன்னும் சென்றெட்டாத உயர்படி இலக்கிய இலக்கண கலை இயல் நிலைகளை அடைந்திருந்தனர்.

தமிழ்ப் புலவர்களும், ஆராய்ச்சியாளர்களும் பண்டைய ஏடுகள் வழி நாகரிகத்தை விரித்துரைக்க முனைந்துள்ளனர். தற்கால மேலை நாகரிகத்துடன் ஒப்பிட்டுக் காட்ட ஏனோ துணியவில்லை.

(ஆ) ஐவர் என்றே தற்பொழுது வெளிவந்துள்ள பதிப்புக்கள் யாவும் குறிக்கின்றன. அதற்குரிய ஒரு பழம் பாடலும் மேற்கோள் காட்டப்படுகிறது.

பெருங்கடுங் கோன் பாலை;
கபிலன் குறிஞ்சி;
மருதன் இளநாகன் மருதம்;—
அருஞ்சோழன்
நல்லுத் திரன்முல்லை;
நல்லந்து வன்நெய்தல்
கல்விவலார் கண்ட கலி.

இந்த ஐவருள் நெய்தல் பாடிய நல்லந்துவனாரே கலித்தொகையின் கடவுள் வாழ்த்துப் பாடியவரும், ஏடு தொகுத்தவரும் ஆவர்.

இப்பாடல் பழம் பாடல்தானோ என்று அறிஞர் வையாபுரிப் பிள்ளை அவர்கள் ஐயுறவு கொண்டுள்ளார். 'இன்னிலை, ஊசிமுறி' முதலிய நூல்களை வெளியிட்ட த. மு. சொர்ணம் பிள்ளையே அதை முதலில் வெளியிட்டவர் என்பதே ஐயுறவுக்குக் காரணமாகக் குறிப்பிடுகிறார். இந்நூல்களின் 'சிருஷ்டி கர்த்தர்' எனவும் பிந்தியவரைக் குறிப்பிடுகிறார். நூலின் காலம் அல்லது சங்க வகுப்பு முறை பற்றிய அவர் கருத்து மட்டும் தான் தப்பாய் இருக்கமுடியும். நூலை அவர் ஆக்கியிருந்தார் என்று சொல்வது பொருந்தாது. ஆனால் பதிப்பாசிரியர் மேற்கொள்ள வேண்டிய சில நடைமுறைக் காப்புக்களை அவர் மேற்கொள்ளத் தவறினார் என்பது வெள்ளிடை மலை.

பாட்டு முற்றிலும் பொய்யல்ல என்பதற்கு உரையாசிரியர் நச்சினார்க்கினியர் கூற்று ஓரளவு வலியுறவு தரும். 142-வது கலிப்பா உரையில் அவர் பாட்டின் ஆசிரியர் நல்லந்துவனார் என்றும், நூல் தொகுத்தவர் அவரே என்பதை 1-வது கலிப்பா வுரையிலும் குறிக்கப்படுகிறது. ஒன்று உறுதி பெறவே மற்றவை வேறு சான்றுகள்மூலம் மறுக்கப்படாத நிலையில் நிலை பெறுவன என்றே கொள்ளத் தக்கன.

ஏட்டின் சொல், பொருள், பண்புகளில் காணப்படும் பேரொற்றுமையே பாடியவர் ஐவராயிருக்க முடியுமா என்ற ஐயம் எழுவதற்குக் காரணம். ஐந்து திணைக்கலைகளும் பாண்டி நாட்டை மட்டுமே சிறப்பிக்கின்றன. புலவர்களில் முதலாமவர் சேரமான் பாலை பாடிய பெருங்கடுங்கோ என்று பெயர் கொண்டவராகத் தெரிவதால் சேர நாட்டினராதல் வேண்டும். நான்காமவர் சோழன் நல்லுருத்திரனார் சோழ நாட்டவர் மட்டுமல்லர், சோழர் குடியினர் எனப்படுகிறது. அப்படியிருந்தும் பாண்டி நாட்டையே பாடியுள்ளார்.

பலர் பாடிய நூல் பா, கருத்து, கொள்கை, பண்பு காரணமாக ஒருமைப் பண்பு பெறுவதற்கு நாலடியாரைச் சான்றாகக் கூறலாம். தவிர, கலித்தொகை தவிர, கலிப்பா தமிழிலக்கியத்தில் மிகுதி இடம் பெறவில்லை. ஒரே தன்மையாக ஏடு முழுவதும் தோற்றுவதற்குரிய காரணங்களுள் இது ஒன்றாகக் கூடும். மூன்றாவது, தொகுத்தவர் ஒற்றுமை கருதி ஒரே குறிக்கோளுடன் தேர்ந்தெடுத்துத் தொகுக்கவோ அல்லது ஒரு குறிக்கோளுடன் இயற்றுவித்துத் தொகுக்கவோ செய்திருக்கலாம். நான்காவது, தமிழக நாடுகளில் பாண்டிநாடு ஒன்றே ஐந்திணைகளும் உடைய நாடு. வேறெப் பகுதியிலும் இன்று பாலை கிடையாது. திருநெல்வேலி மாவட்டத்திலிருக்கும் குதிரை முடித்தேரி என்ற குட்டிப் பாலைவனம் கடல் கொண்ட தமிழகமாகிய பழம் பாண்டிநாட்டின் நடுவிலிருந்த பெரிய பாலைவனத்தில் வடகோடியேயென்று ஆசிரியர் மறைமலையடிகள் கருதியுள்ளார்.

கலிப்பா முழுதும் ஒருவர் பாடலே என்பதற்கு ஒற்றுமை தவிர வேறு மேற்கோளோ சான்றோ கிடைக்கும் வரை, ஐவர் பாடியது என்று ஏற்பதே அறிவுடைமையாகும். முதற்கலி பாடிய பெருங்கடுங்கோ, கலித்தொகையில் பாலை பாடியதனாலேயே பாலை பாடிய பெருங்கடுங்கோ எனப் பெயர் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. அவரைப் பேய்மகள் இளவெயினி பாடிய புறம் 11-ம் பாடல் அடிக்குறிப்பு அவரை அப்பெயரிட்டே குறிக்கின்றது.

(இ) விதவையை இன்று கைம்பெண் என்கிறோம். அவள் வெள்ளாடை உடுத்தலும் இன்று மரபு. ஆனால் இரண்டும் கணவனிழந்தவர்க்குரியதான ஏதோ அமங்கலக் குறி என்று கருதுகிறோம். இக்கருத்து இடைக்காலத்தது. விதவை நிலைக்கும் கன்னி நிலைக்கும் தமிழர் மிகுதி வேறுபாடு கருதினாரல்லர். கைம்பெண் என்பதன் முதற்பகுதி புணர்ச்சியில் மென்மை சார்ந்த 'கை' என்பதே. கைக்கிளை என்பதில் முதற்பகுதி புணர்ச்சியில் வன்மை சார்ந்த இதே 'கை' என்ற பகுதியே. தமிழர் காதலை இரு திசையும் ஒத்த காதல் என்ற முறையில் இரு'கை'யாகக் கருதினார். இன்றும் துணையிழந்தவர்களைக் கையற்றவர் என்றும், அதுபற்றிய நிலையையும் அது கூறும் பாடலையும் 'கையறுநிலை' என்று கூறுகிறோம். கைக்கிளை மறுகை பெறாத, எதிர்கிளையாக ஒரு கை பெறாத ஒருதிசைக் காதலே. அது ஆணுக்கும் உரியது. பெண்ணுக்கும் உரியது. கைம்பெண் அதுபோல ஒருகை அதாவது மறுகையிழந்த நிலையிலுள்ள பெண்ணேயாவாள். கைமை கைக்கிளை போன்ற ஒருகை நிலைதான்; ஆனால் கைபெறுநிலை, கையின் துணை பெறு நிலை அல்ல, கைஇழந்தநிலை—வேறுபாடு அவ்வளவே.

கைம்பெண்ணின் வெள்ளாடையும் இதுபோலக் கன்னிமையின் வெள்ளாடையின்றி வேறன்று. கூந்தலவிழ்த்தல், அணிமணி களைதல்கூட கன்னிமையின் நிலைக்கு மீள்தலன்றி வேறன்று. பழந்தமிழரிடையே கன்னியர் வெள்ளாடையும் காளையர் செவ்வாடையும் அணிந்தனர். திருமணக் காலத்திலேயே மாதர் கூறை அல்லது செவ்வாடையையும் ஆடவர் வெள்ளாடையையும் தலைமாறி உடுத்தினர். செவ்வாடையுடுத்த காளையரைக் கண்டே காளைகள் கலசல் உற்றன. செவ்வாடை நம், காளைத் தொடக்கம் வரை மைந்திளங் காளையர் (மைனர்கள்) அடையாளமாகக் கொள்ளப்பட்டது பலர் நினைவிலிருக்கலாம். தமிழ்ப் பண்பு நீடித்த இலங்கை, பர்மா, மலேயா முதலிய கடல்கடந்த நாடுகளில் இப்பழக்கம் மிகுதி எனத் தோற்றுகிறது.

கன்னிப்பெண்கள் மலர் சூடுவர், செம்மலரல்ல. இன்றும் சென்னை நகரில் மட்டும்தான் கன்னியர் இம்மரபுப்பிழை படுவர். தலையில் கன்னியர் கூந்தலவிழ்த்திடுவர். ஐம்பால் முடிப்பர் (இது இன்று தமிழ் மறந்த, பர்மிய நாட்டில் மட்டும் உள்ள வழக்கம்). திருமண வினையின்போதே கூந்தலாக முடிப்பர். அணிமணி மிகுதி புனையார், தோடு, இதழ் அணிவர். கைம்பெண்கள் மீண்டும் மணமாகா மாதர் நிலையில் செம்மலரும் கூந்தல் முடியும் அணிமணியும் இழப்பர்.

தமிழரிடை மறுமணம் உண்டு. அது இலக்கியத்தில் 'புலனெறி மரபின்படி' குறிக்கப்படுவதில்லை. ஆனால் மறுமணத்துக்கு எதிர்பதமாகக் 'கடிமணம்' என்ற தொகை நிலைத் தொடர் வழங்கப்படுவதுண்டு.

காதல், கட்டிளமையில் மலர்ந்து வாழ்வுடன் வளர்வது. அது மறுதடவை மலர்தலில்லை. மலர்ச்சி காய்த்தல், கனிந்து பழுத்தல், புதிது (குழந்தைகளாக) முளைவிடல் என்ற பின்வளர்ச்சிப் படிகளே உடையது. இது தமிழர் கோட்பாடு. ஆதலால்தான் மறுமணம் இன்றியமையாத ஒரு திருத்தமாக மட்டும் ஏற்கப்பட்டது. கைமை நோன்பின் வகைகளாக, கணவன் இறந்தவுடனே இறத்தல், வலிந்து தீப்புகல், கைமை நோன்பாற்றல் ஆகியவையே இலக்கியம் தருகிறது. மறுமணம், முதல் மணத்தின் ஒரு நிழலே. மாண்ட காதலர் இடத்திலே மறு காதலர் அமைதலன்றித் தம்மளவில் குறிக்கப்படார். இன்றும் தமிழகத்தின் பல பகுதிகளிலே மாண்ட மனைவியின் உடல் செல்லுமுன்பே அடுத்த மனைவியின் பெயர் கூறிவிடல் வேண்டுமென்ற மரபு உண்டு.

கைமை இருபாலருக்கும் பொதுவாயினும் ஆடவர் திறத்திலும் அதற்குச் சான்று கிட்டுதல் அரிதாயுள்ளது. ஒருவேளை சிதறும் புலனெறி வழக்கமாய்த் தொடங்கியிருக்கலாம். ஆனால் இது உலகெங்கும் வளர்ந்துவிட்ட ஒன்றென்று கூறவேண்டும். ஆங்கிலத்தில் கைம்பெண் மட்டுமன்றி கைமையாடவனும் உண்டு. ஆனால் பிந்திய சொல் முந்திய சொல்லினின்றே வழக்கத்திற்கு மாறாகப் புனைந்துகொள்ளப்பட்டுள்ளது.

தமிழகத்தில் இன்றும் சீர்திருத்த இயக்கம் காரணமாகவன்றி பழைய வழக்கப்படியே மறுமணம் உடைய வகுப்புக்களும் மக்களும்தான் மிகுதி என்பதைப் பலர் கவனிப்பதில்லை. காரணம் பழைய புலனெறி மரபு இடைக்காலப் போலி மரபுகளுடன் கலந்து, அவ்வழக்கம் தாழ்ந்த வகுப்பினர்க்குரியது, இழிவானது என்று கொண்டு அதைப் பலர் அணிமைக் காலத்தில் மறைத்தொதுக்கியுள்ளனர்.

மறுமணம் தமிழருக்கு ஏற்புடையது. ஆனால் தமிழர் அதை விரும்பியதில்லை. காதல் துணைவர் நீடித்து ஒருங்கு வாழ்ந்து ஓருயிர் ஈருடலாய் ஒருங்கு வளர்ந்து ஒருங்கு தளர்ந்து முடிதலையே இன்றும் எவரும் விரும்புவர். ★

நான் எழுத்தாளன் ஆனேன்

கண்ணதாசன்

- 3 -

ஏய்! யார் நீ?'-போலீஸ்காரர் அதட்டும் குரலில் கேட்டார். அவன் மௌனமாக இருந்தான். மீண்டும் கடுமையான குரலில் அதே கேள்வியைக் கேட்டார் போலீஸ்காரர்.

யார் அவன்?

ஒரு எதிர்கால எழுத்தாளன். உலகக்கடலிலே நீந்தி உச்ச இடத்தில் கால்ஊன்ற விழையும் ஒருவன். அவனைப் பற்றி அவனுக்கே அதிகமாக எண்ணம். ஆனால், அவற்றைப் போலீஸ்காரரிடம்சொல்லிக்கொண்டிருக்கவா முடியும்! தன் பெயரை மட்டும் சொன்னான்.

'இங்கே உனக்கு என்ன வேலை?'

'வேலை தேடுவதே வேலை!'

'சொந்த ஊர் எது?'

'இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு கிராமம்!'

'மதராசுக்கு எதற்காக வந்தாய்?'

'வேலை தேடித்தான்!'

'கடல்கரையில் படுத்துத் தூங்கக்கூடாது. தெரியுமா?'

'தெரியாது!'

'எழுந்திரி! எழுந்திரி! வேறு எங்கயாவது போய்த் தூங்கு!'

'எனக்குத் தெரிந்தவர்கள் இங்கு யாருமில்லை!'

'யாரும் இல்லாதப்போ, ஏன் வந்தே? ஊர்ல இருக்கமுடியாம கொழுப்புப் புடுச்சு வந்துட்றது. சுத்தரது! பட்ணத்தில வேல கொட்டி வச்சிருக்காங்கண்ணு வந்தே?'

இதற்குப் பதில் சொல்ல அவனுக்குத் தெரியவில்லை.

'எழுந்திரி! எழுந்திரி! பையில எவ்வளவு பணம் வெச்சிருக்கே?'

'காலணாக்கூட இல்லை!'

போலீஸ்காரர் அவன் மடியைத் தொட்டுப் பார்த்தார். பெட்டியையும் திறந்துபார்த்தார். ஒரு தம்பிடிகூட இல்லை. அவரது கோபம் அதிகரித்தது. பெட்டியைத் தூக்கி அவன் கையில் கொடுத்து, 'புறப்படு! புறப்படு!' என்றார். ஒரு நாலணாவாவது அவன் கையில் இருந்திருந்தால் அன்றைய கடற்கரைத் தூக்கத்திற்கு இடைஞ்சல் நேர்ந்திருக்காது. இல்லாதவன்; ஆகவே துரத்தப்பட்டான்.

அவனுக்கு இன்றைக்கு வரைக்கும் ஒரு நம்பிக்கை அசைக்கமுடியாமல் இருந்துவருகிறது. உலகம் உள்ளளவும் லஞ்சம் வாங்கும் பழக்கத்தை, எந்த அரசாங்கமும் ஒழித்துவிட முடியாது. மனிதன் தான் நினைத்ததையெல்லாம் சுலபத்தில் பெறுகின்ற காலம் வந்தாலொழிய, குறுக்கு வழிகளை யாரும் அடைத்துவிட முடியாது. லஞ்சத்திற்குப் பருவமும் உருவமும் கூட உண்டு. பதவி உயர உயர, வாங்குகிற சம்பளம் பெருகப் பெருக, லஞ்சத் தொகையும் உயர்ந்துகொண்டே போகும். இது இயற்கையாக நடைபெற்று வரும் வேடிக்கை. குறைந்த சம்பளக்காரன் அதிக லஞ்சம் வாங்கினால் அர்த்தம் உண்டு. ஆனால் பாவம்! அவன் நாலணாத்தான் கேட்கிறான். உயர்ந்த இடத்தில் இருப்பவன், பணத்தைத் தராசில் போட்டு நிறுத்து வாங்குகிறான். அந்தப் போலீஸ்காரர் நாலணாக் கேட்டதை அவன் ஒரு குற்றமாக நினைக்கவில்லை. அவனுடைய தனிக்கட்டை. இருந்தால்சாப்பிடுவான். இல்லாவிட்டால் தூங்குவான். அவருக்கு எத்தனை குழந்தைகளோ! வேலை இல்லாதவன் வயிற்றைக் காட்டிலும், வேலை பார்ப்பவன் வயிறுதான் அதிகம் விரிந்துவிடுகிறது. தேவைகள் புதிய வழிகளைத் திறந்து கொடுக்கின்றன.

அவன் மீண்டும் கையில் பெட்டியைத் தூக்கிக்கொண்டு, கடற்கரையின் மேற்பாதையின் வழியாகவே நடந்தான். ஒரு நாலு பர்லாங் தூரம் நடந்ததும், மீண்டும் கடற்கரைக்குள் இறங்கினான். மண்ணைத் தோண்டினான். படுத்துவிட்டான். அங்கே போலீஸ்காரர்கள் யாரும் வரவில்லை. காற்று 'விர்'ரென்று வீசிக்கொண்டிருந்தது. அலைகளின் ஒலி, தாளக்கட்டோடு எழுந்துகொண்டிருந்தது. பாணர்களுக்கு மத்தியில் பாவலன் தூங்குவதுபோல் அவன் தூங்கினான். தூக்கம் ஒவ்வொரு உயிருக்கும் இன்றியமையாதது. எத்தனை சிந்தனைகளை அது மூடி வைக்கிறது! நிரந்தரத் தூக்கத்துக்காகத் தற்கொலையை நாடுபவர்கள், ஒன்றும் புரியாதவர்களல்ல. உளைச்சல்பட்ட மனதோடு, உறக்கம் இல்லாமல் திரிபவனைக் காட்டிலும், அமைதிக்காகச் சாகிறவன் அறிவாளிதான். அமைதியை வாழ்நாளிலே கண்டுபிடித்துக் கொள்ளமுடியாத கோழையாக அவன் இருக்கலாம். ஆனால் சாவின்மூலம் அதைத் தேடிக் கொள்ளமுடியும் என்ற நம்பிக்கை ஒளியைப் பெற்ற அறிவாளி அல்லவா அவன்!

விடைபெற்றுப் போகும் இன்றைய உலகத்திற்கும் துவக்க விழா நடத்தப் போகும் நாளைய உலகத்திற்கும் இடைப்பட்ட சமாதி உலகில் அவன் அமைதியாகக் கிடந்தான். பொழுது விடிந்தது. நகரின் கலகலப்புத் துவங்கியது. பிணம் மீண்டும் மனிதனானது. ஆம்; அவன் எழுந்து நடமாடத் தொடங்கி விட்டான். விழித்துவிட்ட கண்களுக்கு முன்னால் பிரச்சினை மண்டியது. காலை உணவு...வேலை... எங்கே கிடைக்கும்? யார் தருவார்கள்? இன்ன இடத்தில் முயற்சிக்கலாம் என்று நிச்சயமாகத் தெரிந்தாலாவது அதை நோக்கி நடக்கமுடியும். எதுவும் புரியாத அந்த அனாதை இளைஞன் மணலிலேயே உட்கார்ந்து சிறிதுநேரம் யோசித்தான். உயிரற்ற பந்து உதைபட்டு உருளுவதைப்போல், அவன் சிந்தனை உருண்டது. இறுதியாக ஒரு முடிவுக்கு வந்தான். எழுத்தாளன் வேலைதானே கிடைக்காது! வேறு ஏதாவது வேலை பார்த்தாலென்ன! உலகத்தில் எத்தனை வகையான வேலைகள் இருக்கின்றன! கடையில் கணக்கு எழுதலாம். பலசரக்குக் கடையானால், அரிசி அளக்கலாம். துணிக்கடையானால், முழம் போடலாம். கசாப்புக் கடையானால் கறி வெட்டலாம். சிகை அலங்காரக் கடையானால் முடிவெட்டலாம். ஏதாவது ஒரு வேலை தேடிவிட அவன் முடிவு கட்டிக்கொண்டான். பைக்ராப்ட்ஸ் ரோடு வழியாக நடந்தான். நுழைந்து ஒரு உணவு விடுதியில் ஏறி வேலை கேட்டு விட்டான். விடுதி முதலாளி அவனை ஏற இறங்கப் பார்த்தார். விசாரித்தார். தான் இன்ன சமூகத்தைச் சேர்ந்தவன் என்று அவன் சொன்னதும், அவர் 'ஆ' என்று வாயைப் பிளந்தார். அந்த சமூகத்தைச் சேர்ந்தவனா உணவு விடுதியில் வேலை கேட்கிறான் என்பது அந்த வாய்திறப்பில் எழுந்த கேள்விக்குறி. அவன் பிறந்த சமூகம், ஆள்தொகையில் சிறியது என்றாலும் பணக்காரர்களை அதிகமாகக் கொண்டது. அந்த சமூகத்தில் ஏழைகளே இருக்கமுடியாது என்றுதான் வெளி உலகம் நம்பி இருந்தது.

அந்த வெளி உலகத்தில் அவர் ஒரு உறுப்பினர்.

சில நேரங்களில் வருகிற தொல்லை இதுதான். இருப்பவன் என்று கருதப்பட்டு இல்லாதவனாக வாழ்பவன் திண்டாட நேருகிறது. இல்லாதவன் என்றே முத்திரை போடப் பட்டால்தான் ஏதாவது நிம்மதி கிடைக்கிறது. அரசாங்க நடைமுறையிலேகூடப் பார்க்கிறோம், பின்தங்கிய வகுப்பினர் என்று சிலருக்கு முத்திரை போட்டு வைத்திருக்கிறார்கள். அவர்களில் சொந்த வசதி அதிகம் படைத்தவர்கள்கூட, அரசாங்கத்தின் இந்த வசதியை அனுபவிக்க முடிகிறது. அரசினரால் 'முன் போகும்' வகுப்பினர் என்று தீர்மானிக்கப்பட்டவர்கள் இருக்கிறார்களே, அவர்களில் இருக்கும் பின்தங்கியவர்கள் பாடு ஆபத்துத்தான். அவர்களுக்குச் சொந்த வசதியும் கிடையாது. அரசாங்க வசதியும் கிடையாது.

அந்தப் பணக்காரவம்சத்து ஏழையிடம் பரிதாபமாகப் பேச்சுக் கொடுத்தார் விடுதி முதலாளி. இறுதியில், 'உங்களையெல்லாம் இங்கே வேலை பார்க்கச் சொல்ல என் மனது நடுங்குது' என்று கூறி அனுப்பிவிட்டார். இன்றும் அந்த முதலாளி இருக்கிறார். அவரைப் பார்க்கும்போதெல்லாம், அவனுக்குப் பழைய ஞாபகம் எழுந்துகொண்டிருக்கிறது.

அடுத்தாற்போல் அவன் கவனித்தது ஒரு சிகை அலங்காரக் கடையை. அந்தக் கடையில் அவனுக்கு இரண்டு வகையான தேவைகள். ஒன்று அவனே முடி வெட்டிக்கொள்ள வேண்டும். மற்றொன்று யாருக்காவது முடி வெட்டுகிற வேலை அவனுக்குக் கிடைக்கவேண்டும். இதில் முன்னதைப்பற்றி அவனுக்குக் கவலை இல்லை. பின்னதுதான் பெருந் தேவை. முடிவெட்டுவதிலோ, முகம் வழிப்பதிலோ அவனுக்குப் பழக்கம் இல்லை. ஆனாலும் யார் தலையிலாவது பழகிக்கொள்ளலாம் என்ற நம்பிக்கை இருந்தது. எவனாவது ஒரு பட்டிக்காட்டான் வராமலா போவான்? அவனுக்கெல்லாம் முடியை இப்படி இப்படி வெட்டிக்கொள்ள வேண்டும் என்ற திட்டம் ஒன்றும் கிடையாது. எப்படி வெட்டினாலும் சகித்துக் கொள்வான். அதனால்தான் அந்த வருங்கால எழுத்தாளன், அந்த வேலையாவது கிடைத்தால் போதும் என்று தீர்மானித்தான். படிக்கட்டுகளில் ஏறி 'வேலை இருக்கிறதா?' என்று கேட்டு விட்டான். உணவு விடுதியில் நடந்ததே இங்கும் நடந்தது. அந்தப் பரிதாபத்திற்குரியவன் வெளியேறினான்.

அங்கிருந்து பெல்ஸ் ரோட்டில் திரும்பி நடந்தான். அவனுக்குத் தெரிந்த சிலபேர், சென்னையில் பட்டாளத்துக்குச் சட்டை தைக்கும் 'காண்ட்ராக்ட்' எடுத்திருந்தார்கள். அவர்கள் எல்லோரும் தங்குவதற்கும் சாப்பிடு

— 9-ம் பக்கம் —

வாழும் மொழியில் வாழா மொழி!

பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை, எம்.ஏ., எல்.டி.

5

'மொழிப் பகைமை கூடாது' என்றும், 'பிறமொழிப் பகை கூடாது' என்றும் வடமொழிப் பற்ருளர் மொழிபற்றிப் பொதுவாகவே கூறுவர். ஆனல் அவர்கள் மனத்தில் குறித்த பிறமொழி, வடமொழி மட்டுமே. அவர்கள் அறிவுரைக்கு ஆளாவதும், தமிழ்மொழியும், தமிழரும் மட்டுமே. இதை நாம் எளிதில் காணலாம். தமிழில் திருத்தத்துக்காக, தமிழில் இல்லாத வடமொழி எழுத்துக்கள் தேவையாளுல், அதுபோலவே ஏனைப் பிறமொழிகளின் சிறப்பெழுத்துக்களும் தமிழிலும். வடமொழி போன்ற மொழிகளிலும் தேவைப் படவேண்டும். எடுத்துக்காட்டாக ஆங்கிலத்தில் ஃவ(F), ஃய(Z], உஅ (W) முதலிய பல ஒலிக்குறியீடுகள் தமிழிலோ, வடமொழியிலோ, மலையாளம், தெலுங்கு முதலிய ஏனைய தெற்கை, வடஇந்தியத் தாய்மொழிகளிலோ இல்லாதவை. இவற்றை இம்மொழிகளில் புகுத்த யாரும் எண்ணியதில்லை. வடமொழிப் பற்ருளரும் அவற்றை நினைவூட்டக் கருதியது கிடையாது.

இது மட்டுமோ? தமிழில் உள்ள ழகரம், றகரம், னகரம், எகரம், ஒகரம் ஆகியவை வடமொழியில் இல்லாதவை. முதல் மூன்றும், வடஇந்தியத் தாய்மொழிகளுக்கும் தற்கால கன்னட, தெலுங்கு மொழிகளுக்கும் புதுமையானவை. ஆனல் திருத்தம் கருதி இவ்வெழுத்துக்களை இம்மொழிகளிலெல்லாம் புகுத்திடு செய்யப்படவேண்டும் என்று, யாரும் கூற முன்வந்ததில்லை. வந்திருப்பினும், அவர்களை அம்மொழியாளர் மூளைக்கோளாறுடையவராகக் கருதுவரேயன்றி வேறன்று.

ஆதிக்க மொழியாகிய வடமொழியிலிருந்து தமிழுக்கு, அதே ஆதிக்க மொழியாகிய இந்தி மொழியிலிருந்து தமிழுக்கு என்று சொற்புகுத்திடும், எழுத்துப்புகுத்திடும் வடமொழிப் பற்ருளர் உள்ளத்தில், மேலிருந்து கீழாக இறங்கி வருமே தவிர, வடவர் சுரண்டலுக்குரிய தமிழ் முதலிய மொழிகளிலிருந்து, வடமொழிக்கு, இந்தி மொழிக்கு அவர்கள் கற்பனையவாவில் ஏறிச் செல்வதில்லை என்று காணலாம். இது மட்டுமன்று திருத்தத்தின் அவசியம், எழுத்துப் புகுத்தீட்டின் அவசியம் ஆகியவற்றைப் பற்றி, இந்தி மொழியின் அனுபவம் தமிழகத்துக்கு நல்ல படிப்பினைகள் தருவதாகும். இந்தியை ஆதிக்க மொழியாக வரவேற்கும் அரசியலாரும், அரசியலாரின் தமிழ் ஆட்சி மொழிக் குழுவினரும், வடமொழிப் பற்ருளரும் இவற்றை ஒரு சிறிதும் எண்ணிப்பாராதது வியப்புக்குரியதாகும்.

வடமொழியின் நான்கு சகரங்களுக்கும் உட்படாத ஐந்தாவது சகரம் தெலுங்கில் உண்டு. குற்றியலுகரம் துளுமொழியில் உண்டு. இவற்றைப் பிறதமிழின மொழிகளிலோ, வடமொழி வழங்கிய தாய் மொழிகளிலோ, மேலை மொழிகளிலோ புகுத்துவது பொருத்தமாகவே இருக்கும். ஆனல், வடமொழியாளர் கற்பனைகள் சமதளத்திலும் செல்லமாட்டா, ஏறிச் செல்லவும் மாட்டா என்பதை இவற்றின் மூலம் காண்கிருேம்.

இலக்கிய, இலக்கணமும், எழுத்து வடிவும் அற்ற, வெறும் பேச்சு மொழியாக இந்தி அணிமைக்காலம் வரை நிலவிற்று. இப்பேச்சு மொழி இந்தியையே, காந்தியடிகள் 'இந்துத்தானி' என்று பெயரிட்டு அழைப்பர். தனக்கென எழுத்தற்ற இந்த மொழியில், வடமொழிப்பற்ருளராகிய இந்துப் பண்டிதர்கள், வடமொழிச் சொற்களை பேரளவில் சேர்த்தனர். வடமொழி தேவநாகரி எழுத்து வடிவையே எழுத்து வடிவாகக் கொண்டனர். இந்த வடிவிலேயே, அது இந்தி என்று அழைக்கப்படுகிறது. இதற்கு நேர் எதிராக, அரபு-பாரசிக மொழிப்பற்ருளராகிய முசல்மான் பண்டிதர்கள், இதே மொழியில் அரபு-பாரசிகச் சொற்களை பேரளவாகக் கலந்தனர். அரபி - பாரசிக மொழிகளின் எழுத்து வடிவையே, எழுத்து வடிவாகவும் கொண்டனர் இந்த வடிவிலேயே, அது உருது என்று அழைக்கப்படுகிறது.

இந்தி, உருது ஆகிய இந்த இரு வடிவங்களும், இன்று. இரு நிலையாக, இரு வேறு மொழிகளாகப் பிளவுற்று இயங்கத் தொடங்கியுள்ளன. பாமரமக்கள் மொழியாகிய இந்துத்தானி மூன்ருவது மொழியாகவே விரைவில் ஆகிவிட வழியுண்டு.

பிறமொழிச் சொற்புகுத்திடும், பிறமொழி எழுத்துப் புகுத்திடும் தடையற்ற வளர்ச்சி பெற்ருல், ஒரு மொழி இரண்டு மூன்ருகப் பிளவுபட்டு விடுவது உறுதி என்பதையும்; தாய்மொழி ஒருபுறம் இலக்கிய இலக்கணப் பண்பற்ற ஒரு பண்படா மொழியாகவும், அதன் இலக்கிய மொழி வடமொழியைப்போல, மக்கள் தொடர்பற்ற ஒரு வழக்கிழந்த மொழியாகவும், மாறுபட்டு விடும் என்பதையும் இப்போக்குச் சுட்டிக்காட்டுகின்றது.

தமிழ் நீங்கலான, உலகின் மற்ற எல்லா உயர் தனிச் செம் மொழிகளும், வடமொழி போலவே எவ்வாறு வழக்கிழந்த மொழிகளாக வீழ்ந்தன என்பதை, இந்த மொழி விளக்கம் தெளிவாகக் காட்டுகிறது. இம்மொழிகள் யாவும், பன்மொழிக் கலப்புகளாகத் தொடங்கிய இலக்கிய மொழி வடிவங்களே என்பது, கூர்ந்து நோக்கத் தக்கது.

தென்னகத்தின் நடுநாயகப் பண்டைமொழி வடிவாகிய தமிழிலிருந்து, தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகள் பிரிந்து வேறு வேறு மொழிகளாகப் பிளவுறுவதற்கு, வடமொழிச் சொற்கலப்பும், எழுத்துக்கலப்புமே காரணமாயிருந்தன என்பதும் கவனிக்கத்தக்கது.

இந்தி மொழி தரும் படிப்பினைகள், இன்னும் பல உண்டு.

இந்திமொழி, தாய்மொழிகளில் ஒன்று. எழுத்து வடிவம் இல்லாத காலத்திலும் அதற்கு எழுத்துக்கள், அதாவது ஒலிகள் உண்டு. இவற்றுள் சிலவற்றுக்கு வடமொழியிலோ, அரபு-பாரசிக மொழியிலோ தக்க எழுத்துக் குறியீடுகள் இல்லை. ஆகவே, இரு எழுத்து வடிவங்களிலும், சில பொது எழுத்துக்களுக்கும் புள்ளியிடுதல், புள்ளி பெருக்குதல் ஆகிய முறைகளினல் அவ்வொலிகளுக்கு புதுக் குறியீடுகள் உண்டுபண்ணப்பட்டன. மேலும், இந்தி, உருது இப்போது வேறு வேறு அயல்மொழிக் கலப்பால் வேருகப் பிரியத் தொடங்கிவிட்டாலும் பிரியுமுன், வடமொழிச் சொற்களில் மிகப் பல இந்தியைப் போல உருதுவிலும், அரபு-பாரசிகச் சொற்களில் மிகப் பல, உருதுவைப் போல இந்தியிலும் இடம்பெற்றுவிட்டன. இவற்றை எழுதும்போது உருது, வடமொழி எழுத்துக்களைப் பெரும்பாலும் கூட்டெழுத்துக்களாக்கி யமைந்தது. ஆனல், சில எழுத்துக்களுக்கு புள்ளி சேர்த்து அல்லது புள்ளி பெருக்கியே அது புதுக் குறியீடுகள் அமைத்தது. அதே சமயம், இந்தி மொழி இது போல அரபு-பாரசிக எழுத்துக்களை எளிதாகக் குறிக்க முடியவில்லை. ஓர் ஏழு எழுத்துக்களை மட்டும், பொது எழுத்துக்களின் புள்ளியிட்டுத்திருத்தமாகக்காட்ட முற்பட்டது. ஆனல் இந்திபேசுபவர்களுக்கு மட்டுமின்றிப படிப்பவர்க்கும் இந்த உச்சரிப்புக்கள் முற்றிலும் அயலாயிருந்ததனல், இவற்றில் இன்று பெரும்பாலும், புள்ளிகள் ஒலியிலும், எழுத்திலும் புறக்கணிக்கப் பட்டே வருகின்றன.

இந்தியில் உருதுவிலிருந்து புகுத்திடு செய்யப்பட்ட அரபு ஒலிக்குறியீடுகள் ஏழு நீங்கலாக, வேறு உருது, அதாவது அரபு-பாரசிகச் சிறப்பெழுத்துக்கள் உண்டு. எடுத்துக் காட்டாக, இந்தியின் ஒரு தகரத்துக்கு எதிராக உருதுவில் இரண்டு தகரமும், இந்தியின் ஒரு தகரத்துக்கு .(ஃச = ஸ) எதிராக அத்தகைய இரு வேறுசகரங்களும், இந்தியில் இல்லாத, ஆனல் புகுத்திடு செய்யப்பட்ட ஏழு எழுத்துக்களில் ஒன்ருன சகரத்துக்கு (ஃச்ய = ZA) எதிராக நாலு சகர ஒலிகளும் உருதுவில் உள்ளன. இவற்றைப் புகுத்திடு செய்யவோ அதன் மூலம் திருத்தம் பேணவோ இந்திய மொழியாளரோ இந்தி பேசும் வடமொழிப் பற்ருளரோ ஒரு சிறிதும் [illegible] தில்லை, முயல்வதில்லை, [illegible] போவதுமில்லை. ஏனென்ருல் [illegible] வில் புகுத்திடு செய்யப்பட்டஏழு [illegible] வெற்றிபெறவில்லை.

இந்தியின் இந்த அனுபவங்களால், நாம் கீழ்வரும் மொழித் துறைச் செய்திகளை உள்ளங்கை நெல்லிக்கனிபோல உணரலாம். முதலாவது, எழுத்துப் புகுத்தீட்டால் திருத்தம் மொழியில் வெற்றி பெருது. வெற்றி பெற்ற அளவிலும் நிலைக்காது; நீடிக்காது; இரண்டாவது, திருத்தம் இன்றியமையாது வேண்டப்படும் இடத்தில்கூடப் புது வடிவம் தேவையில்லை. புள்ளியிட்ட பொது வடிவமோ, கூட்டெழுத்து முறையோ போதுமானதாகும். மூன்ருவதாக மொழி அடிமை மொழியாய் இருக்கும் காலத்தில்தான் இந்தத் திரு[illegible]தமோ, அயல் மொழி எழுத்[illegible] புகுத்தீடோ, சொற்புகுத்தீடோ கூ[illegible] விலகும் என்பது. இந்தி[illegible] அரசியல் ஆதிக்கமூலம் பரப்ப[illegible] விதிர் விதிர்க்கும் இந்தி மொழி[illegible]யாளருக்கும், அதை ஆதரித்துத் தம் தனி நலம், குழு நலம் நாடு[illegible] அதைக் கற்கும் தென்னவருக்கும் அம்மொழி தரும் இப் பொன்னனா[illegible] படிப்பினைகள் கூட புலனுவதில்லை. ஏனென்ருல் அவர்கள் இந்தி தாய்மொழி என்ற அளவில் அதில் பற்றுக் கொள்ளவில்லை, அதே நேசிக்க[illegible]வில்லை. ஆதிக்கமொழி என்ற முறை[illegible]யிலே அதில் பற்றுள்ளவராக அதை[illegible] நேசிப்பவராக நடிக்கின்றனர்.

வடமொழியாளரின் உள்ளார்ந்த ஆவலறிந்து அவர்கள் பிரதிநிதி[illegible]ளான அரசியலாரும், அவர்க[illegible] ஆட்களாக அவர்களால் அமர்[illegible] பெற்று, அவர்கள் உட் கிடக்கை[illegible] அறிந்து அதை ஆதரித்தோ அல்[illegible]லது அதை மறுக்க அஞ்சியோ[illegible] நான்கு எழுத்துப் புகுத்தீட்டுக்கு[illegible] சார்பாக முடிவு தெரிவித்துள்ள[illegible] தமிழ் ஆட்சிக்குழுவும், அ[illegible] புகுத்தீட்டுக்குச் சொல்கிற அல்லது[illegible] சொல்லத்தக்க அல்லது சொ[illegible]லக்கூடும் நியாயங்களை எடுத்து[illegible] அவற்றின் முரண்பாட்டை[illegible]யும், பொருத்தமின்மையையு[illegible] இங்கே பிறமொழி ஒப்பீடுகள[illegible]லேயே-ஆதிக்க மொழிகளின் வ[illegible]லாற்ருலேயே காட்டியுள்ளோம்.

— அடுத்த இதழில் முடியும் —

★ ★

—11ம் பக்கத் தொடர்ச்சி—

யூனியன் இதைச் செய்வது சாத்தியமில்லை என்பது தெளிவு. ஏனெனில் இவ்வாறு செய்வதால் சோவியத் யூனியன் பெரிதும்பாதிக்கப் படும்'' என்று அந்த அமைச்சர் சர்க்கார் சார்பில் கூறியுள்ளார்.

எனவே தனது சொந்த பாதுகாப்பை உத்தேசித்தும், உலகெங்கும் சமாதானத்தைப் பாதுகாக்கும் பொருட்டும், புதுப்புது வகையான அணு, நீர்வாயு ஆயுதங்களையும், ரேடியோ கதிரியக்கத்தால் இயங்கி குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்று வெடிக்கும் 'எறிபடை'களையும் ரஷ்யா தயாரிக்கவேண்டியிருக்கிறது. ரஷ்யா அணுசக்தி ஆயுதங்களை உற்பத்தி செய்யாவிட்டால் அமெரிக்காவின் ஆதிக்கவெறி உச்சநிலையை அடைந்திருக்கும்.

ரஷ்யா சென்று திரும்பிய இக்பல் சிங் என்ற இந்திய எழுத்தாளர் கூறுகிருர், ''வகுப்புப் பிரிவு, தேசிய எதிர்ப்பு இவைகள் உண்மையிலேயே ரஷ்யாவில் கிடையாது. அங்கு மக்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொள்ளாது, ஒற்[illegible]மையுடன் தங்கள் தேவைகளை[illegible] பூர்த்தி செய்துகொள்கின்றன[illegible] சோவியத் நாட்டில் மக்கள் தங்க[illegible] விருப்பப்படி எந்த இடங்களிலு[illegible] தங்கியிருக்கின்றனர். 'அவர்க[illegible] நாட்டிற்குச் சொந்தம். வளமா[illegible] நாடு அவர்களுக்குச் சொந்த[illegible]' என்று அவர்கள் கருதுகிருர்கள்.

அரசியல், பொருளாதார, சமூக[illegible] துறைகள் பலவற்றிலும் முன்னே[illegible]யுள்ள ரஷ்யா தன் வளத்தை[illegible] தானே அனுபவிக்கவில்லை[illegible] தொழில் துறையில் பின்தங்கி[illegible] கிடக்கும் மற்ற நாடுகளுக்[illegible] தொழில் நுணுக்கங்களையும் கட[illegible] உதவிகளையும் அளித்து வருகிறது[illegible]

இத்தகு நோக்கமுள்ள ரஷ்யாவை[illegible] ஏகாதிபத்திய நாடு என்று எப்படி[illegible] கூறமுடியும்? ரஷ்யா ஏகாதிபத்தி[illegible] நாடாயிருந்தால் இன்றுவரை ஆ[illegible] வாழ்ந்திருக்க முடியாது. எந்த ஒ[illegible] ஏகாதிபத்தியமும் இவ்வளவு நா[illegible]கள் வாழ்ந்ததாக வரலாற்றி[illegible] காணமுடியாது. எனவே ரஷ்ய[illegible] ஒரு முற்போக்கு சக்தியேயாகும்!

‘தென்றல்’ இதழும் பக்தவத்சலமும் !

ஸ்பெஷல் ஆர்ம்டு (எஸ். ஏ. பி.) போலீசாரின் வாழ்க்கைப் பிரச்சினையை பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டுவந்த பெருமை நமது ‘தென்றல்’ இதழையே சாரும். முதன்முதலாகத் தலையங்கம் தீட்டியதும், எஸ். ஏ. பி. தோழர்களின் வாழ்க்கையில் குறுக்கிட்ட உண்மைச் சம்பவங்களைக் கோர்வை செய்து குறுநாவலாகத் தீட்டியதும் ‘‘தென்றல்’’ இதழ்தான் என்பதை தமிழகம் நன்கறியும். அதை யொட்டி பேராசிரியர் அன்பழகன் அவர்கள் சட்டமன்றத்திலே கேள்விக் கணைகளைத் தொடுத்தார்கள். சென்னை மாநிலத்தின் உள்நாட்டிலாகா அமைச்சராக இருக்கும் பக்தவத்சலம் அவர்கள், பேராசிரியரின் கேள்விகளில் உண்மை இருப்பதாகக் கருதவில்லை. ‘அப்படி ஒன்றும் இல்லையே’ என்று ‘பெரிய மனிதர்கள்’ பாணியில் கையை விரித்துவிட்டார்.

எஸ். ஏ. பி. பற்றிய பிரச்சினையில் கழகம் சுட்டிக்காட்டும் குறைகளை காங்கிரஸ் ஆட்சியாளர்கள் பொதுமக்கள் மத்தியில் எந்த அளவுக்கு அலட்சியப் படுத்துகின்றனர் என்பதை அமைச்சரின் அன்றையச் சட்டமன்றத்துப் பதில் மெய்ப்பித்துக் காட்டிவிட்டது. ஆனால் உண்மையிலேயே, தி. மு. கழகம் எடுத்துக்காட்டும் குறைகளை மந்திரி சபை துச்சமாகக் கருதுகிறதா என்றால், இல்லை ! மன்றத்திலே குற்றங்களை ஒப்புக்கொண்டால் மக்களின் கவனம் எதிர்க்கட்சியின் பக்கத்தில் போய்விடுமென்று காங்கிரஸ் கனவான்கள் கருதுகிறார்கள் ! அவலம்! அவலம்!!

எஸ். ஏ. பி. பிரச்சினையைத் ‘தென்றல்’ இதழில் படித்த அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள், இனிமேல் இதுமாதிரியான எதிர்க்கட்சிப் பத்திரிகைகளைப் படிக்கக்கூடாதெனக் கேட்டுக்கொண்டதாக-இல்லை - மிரட்டியதாக நமக்குச் செய்தி கிடைத்திருக்கிறது.

ஆகஸ்டு முதல் வாரத்தில் ஒருநாள் இரவு ஒன்பதுமணிக்கு எஸ். ஏ. பி. அதிகாரிக்கு ஒரு செய்தி கிடைத்ததாம். அதன்படி மறுநாள் காலை 11 மணிக்கு எஸ். ஏ. பி. படையினர் அனைவரும் ஆவடி முகாமிற்குஅழைத்துச்செல்லப்பட்டனராம். அதுவரை, எதற்காக படையினர் அனைவரும் ஒன்று சேர்க்கப்படுகின்றனர் என்பதே அதிகாரிகளைத்தவிர வேறு யாருக்கும் தெரியாது - தெரிவிக்கப்படவில்லை.

எஸ். ஏ. பி. படையினர் வரிசையாக அணிவகுத்து நின்ற பிறகு முன்னேற்பாட்டின்படி அமைச்சர் பக்தவத்சலம் அங்கே வந்தாராம் ! வந்தவர் விசுவாசமுள்ள படையினரின் குறைகளைக் கேட்கவில்லை; ஆவன செய்கிறோம் என்றும் கூறவில்லை. ‘ஆகட்டும் பார்ப்போம்’ என்று காமராசர் பாணியிலேயாவது கூறினாரா? இல்லை !

‘‘நமக்குள்ளே இருக்கும் கருத்து வேறுபாடு எப்படி ‘தென்றல்’ பத்திரிகைக்காரர்களுக்குத் தெரிந்தது? விடாமல் எழுதிக்கொண்டிருக்கிறார்களே! யாரோ நம்மவரில் ஒருவர்தான் இந்த வேலையைச் செய்கிறார். குறைகளை எங்களிடம் கூறுங்கள். எதிர்க்கட்சிக்காரர்களிடம் கூறுகிறீர்கள். அவர்கள் வலைவீசுகிறார்கள்’’ என்று பேசினாராம். ஆனால் அமைச்சரிடம் மனம் விட்டுப்பேச யாரும் அனுமதிக்கப்படவில்லையாம் !

சென்ற திங்கள் ஆவடியில் படையினரில் ஒருவர் தண்டிக்கப்பட்டது பற்றி அமைச்சரிடம் கேட்டபோது, ‘தண்டிக்கப்பட்டதே நீதி’ என்று சொல்லிவிட்டு எந்தப் பரிகாரத்திற்கும் வழி கூறாமல் போய்விட்டாராம்!

எப்படி இருக்கிறது ஆட்சியின் (?) மாட்சி! சட்டசபையிலே கேட்டபோது குறையே இல்லை என்றார். முகாமிற்கு வலிய சென்று ‘உங்கள் குறை எப்படி அவர்களுக்குத் தெரிந்தது!’ என்று கேட்கிறார்.

சிறைச்சாலையும் அறச்சாலையாக வேண்டுமென்றார் காந்தியார். அவருடைய சீடர்களோ அதர்மத்தின் பாதுகாவலர்களாக இருக்கிறார்கள் !

மன்றல் அழைப்பு

நிகழும் 30-8-57 (ஏவிளம்பி ஆவணி 14) வெள்ளிக்கிழமை காலை 8 மணி அளவில்

எனக்கும்

வழக்கறிஞர் வெங்கட்டராமன் பி.ஏ., பி.எல்., மகள்

தோழியர் லலிதாவுக்கும்,

(ஆசிரியர், குருகுலம், திருமறைக்காடு.)

கலப்புத் திருமணம் மாயூரம் கோமதி திரைப்பட மாளிகையில் நிகழும். மணவினைக்கு, அறிஞர் **அண்ணா** அவர்கள் தலைமை வகித்து வாழ்த்துரைப்பார்கள். வதுவைக்கு தமர் சூழ வருகை தந்து மன்றலைச் சிறப்பிக்க வேண்டுகின்றேன்.

இன்னணம்,
(புலவர்) **அறிவுடை நம்பி.**

18, வடக்கு வீதி,
கூறைநாடு, மாயூரம்.

— 7ம் பக்கத் தொடர்ச்சி —

வதற்குமாக பெல்ஸ் ரோட்டில் ஒரு வீடு பிடித்திருந்தார்கள். அந்த ஞாபகம் வந்ததும், அவர்கள் தங்கியிருக்கும் வீட்டைத் தேடிக்கண்டுபிடித்தான் அவன். அவர்கள் எல்லோருமே அவன் போன நேரத்தில் அங்கே இருந்தார்கள். அவர்களில் அவனை வரவேற்பவர்கள்கூடச் சிலர் இருந்தார்கள். அப்பாடா ! ஒரு பெரும் பிரச்சினை தீர்ந்தது. தங்குவதற்கு அவனுக்கு வீடு கிடைத்துவிட்டது. அதோடு வேலையும் கிடைத்துவிட்டது. அந்த வேலைக்குக் கூலி, வேளாவேளைக்குச் சாப்பாடு; அவ்வளவுதான் ! அவன் அன்றிருந்த நிலைமைக்கு அது போதாதா? ஏற்றுக்கொண்டு விட்டான். என்ன வேலை? தினசரி ஜாம் பஜார் மார்க்கெட்டுக்குப்போய், காய்கறி வாங்கிவர வேண்டும்; அவ்வளவுதான் !

அவன் தன் கடமையைச் செய்ய ஆரம்பித்தான். இரண்டொரு நாள்வரை என்ன விலைக்குக் காய்கறி வாங்கினானோ, அதே விலைப்படி கணக்குக் கொடுத்து வந்தான். அதற்குப் பிறகு அவனது கைச்செலவுக்குக் கொஞ்சம் காசு தேவைப்பட்டது. தேவைப்பட்டவன் திருடுவதில் தவறில்லை என்பது அவனது அப்போதைய ஏழைமை வகுத்த சித்தாந்தம். நாலணா முள்ளங்கியை ஐந்தணா ஆக்கினான். ஓரணா கீரை தானாகவே ஒன்றரை அணா ஆயிற்று. இப்படி எல்லாக் காய்கறிகளும் அவனுக்காகத் தங்கள் விலையை உயர்த்திக் கொண்டன. இதன் மூலம் தினசரி அவனுக்கு எட்டணாவுக்குக் குறையாமல் கிடைத்து வந்தது. இன்றைக்கும் பெல்ஸ் ரோட்டிலுள்ள அந்த வீட்டைப் பார்க்கும்போதெல்லாம், அவனுக்கு அந்த ஞாபகம் வருகிறது. தினசரி மாலைநேரங்களில் கடற்கரைக்குப் போக அவனுக்கு வாய்ப்புக் கிடைத்தது. படம் பார்க்கவும் சந்தர்ப்பம் கிடைத்தது. இந்த வாழ்க்கையின் மூலம், இரண்டொரு மாதங்களை வழியனுப்பி வைத்தான். இன்றைய வாலிபர்களைப்போலவே, அவனுக்கும் அன்று ஒரு ஆசை திடீரென்று எழுந்தது. திரைப்படங்களில் நடித்தாலென்ன? என்று ஒரு கேள்வியைத் தனக்குத் தானே, போட்டுக்கொண்டான். தன் பெயரைச் ‘சந்திரமோகன்’ என்று மாற்றிக்கொண்டான். அப்போது அடையாறிலிருந்து, இப்போது ‘பரகதி’யாகிவிட்ட ஒரு படப்பிடிப்பு நிலையத்திற்கு விண்ணப்பித்துக் கொண்டான். அவர்கள் பதில் எழுதுவதில் மிகவும் சுறு சுறுப்பானவர்கள். ‘வேலை இல்லை’ என்று உடனேயே பதில் எழுதிவிட்டார்கள். பதில் கிடைத்தபோது அவன் வருந்தினான் என்றாலும், தான் ஒரு நடிகனாகிவிட முடியும் என்கிற நம்பிக்கையை மட்டும் விடவில்லை.

இந்த நேரத்தில்தான் பதினாறு வயது நிரம்பாத அவனுக்கு, ஒரு புதுமையான அனுபவம் ஏற்பட்டது. அந்த அனுபவத்தை உண்டாக்கித் தந்தது, அன்று இருந்த டிராம் வண்டி. ராயப்பேட்டையில் அந்த டிராம்வண்டியில் ஏறி உட்கார்ந்தான். அவன் எதிரிலே ஒரு பெண் உட்கார்ந்திருந்தாள். இன்றைக்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் இறந்துவிட்ட அந்தப் பெண்ணின் பெயர் எமிலி. கிருத்துவ வகுப்பைச் சார்ந்தவள். அவள் கையில் ‘குவண்டிண் டர்வார்டு’ என்ற ஆங்கிலப் புத்தகம் வைத்திருந்தாள். கழுத்துச்சங்கிலியில் சிலுவை மின்னிக்கொண்டிருந்தது. சிறிதுகூட கள்ளம் கபடம் கலவாத தெளிந்த முகம். நீல நிறச் சேலையும், வெண்ணிற ரவிக்கையும் அணிந்திருந்தாள். இடது கைவிரலில் ஒரு சிலுவை மோதிரம் அணிந்திருந்தாள். அந்தப் பரிதாபத்திற்குரிய வாலிபனை, அவள் மிகவும் அனுதாபத்தோடு பார்த்தாள்.

(தொடரும்)

வெண்பாப் போட்டி

3

ஈற்றடி :

கொங்தளிக்கும் மக்கள் குணம்.

முடிவு தேதி 7-9-57

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

வாழ்க்கையும் இலக்கியமும்-மேகமும் மழையும்

— 1ம் பக்கத் தொடர்ச்சி —

மேலே குறிப்பிட்ட காவியங்கள் மூலம் காணலாம். ஆகவே சமுதாயத்தினர் வாழ்க்கையும், இலக்கியமும் ஒன்றையொன்று பிரிக்க முடியாத தொடர்பைப் பெற்றிருக்கின்றன. முன்னதைக் கார்முகிலுக்கு ஒப்பிட்டால் பின்னதைக் கைம்மாறு கருதாக் கடப்பாடுடைய மாரிக்கு ஒப்பிடலாம். சமுதாய வாழ்வின்றேல் இலக்கியம் இல்லை. இலக்கியங்கள் இல்லையேல் தொன்மைமிகு சமுதாயத்தினரை நம் அகக்கண்ணால் காணவியலாது.

சங்ககால இலக்கியங்கள் தொழிலால் பலவகையாகப் பிரிந்திருந்த சாதிமுறைகளைக் கொண்ட சமுதாய அமைப்பினை விளக்குகின்றன. "வள்ளுவர் செய் திருக்குறளை மறுவற நன்குணர்ந்தோர்கள், உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்துக்கொரு நீதி" என்று பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள், சங்ககாலச் சமுதாய அமைப்பிலில்லாச் சாதிகள் பிற்காலத்தில் உண்டாகியதைக் குறித்துக் குறைகூறியுள்ளார். பிற்காலத்தில் இருந்த சில பழக்க வழக்கங்களைப் போன்றல்லாமல், ஆண், பெண் ஆகிய இரு சாதியினரும் கற்றுத்துறை போகும் ஆற்றலுடையவர்கள் என்பது சங்க இலக்கியங்கள் காட்டும் சமுதாய வாழ்வாகும்.

எஸ்பெர்ஸன், விட்னே போன்ற மொழிநூல் அறிஞர்கள் தாங்கள் தந்த மொழித் தொடர்பான சிறந்த கருத்துக்களுக்கு மேற்கோளாகத் தமிழகத்துப் பிறந்த ஒரு பெண்மணியின் இலக்கண நூலை ஆதாரமாகக் காட்டியுள்ளனர். இருபதாம் நூற்றுண்டில் இவ்வுயரிய நிலையில் போற்றித் துதிபாடும் அளவில் அமைந்த இலக்கண நூலைச் செய்த அம்மையாரின் பெயரைச் சங்ககால சமுதாயம் மறந்துவிட்டது. காலம் மறந்த ஒன்றை-செய்யத் தவறிய ஒன்றை இலக்கியம் செய்துமுடித்தது. கரைந்துண்ணும் காக்கையைக் கவிபாடி அழைத்ததாக அமைந்துள்ள ஒரு நிகழ்ச்சியைக் கொண்டே ஓர் அம்மையாருக்குக் "காக்கைபாடினியார்" என்ற பெயரைப் பிற்காலச் சமுதாயம் வைத்து மகிழ்ந்தது.

அக்காலத் திருமணங்கள் இக்காலத்தில் நடைபெறும் திருமணங்களைப்போல் எவ்வித சடங்குகளும் இல்லாமல் அமைதியாக நடைபெற்றன என்றும், வேள்வி இல்லை, வேதம் ஓதுபவன் இல்லை, தட்சணை பெறுபவனில்லை என்றும், ஆரிய மணம் கலவாத தூய தமிழ்மணம் என்றும் வரலாற்றுப் பேராசிரியர் பி. டி. சீனிவாச ஐயங்கார் கூறுகின்ருர்.

தொல்காப்பியனார் அல்லது அவரது காலத்திற்குமுன் வாழ்ந்த மக்கள், கடவுள்பால் அன்பும், அச்சமும் கொண்டவர்களாகவும், எதையும் எளிதில் நம்பிவிடுபவர்களாகவும் இருந்தனர். சோதிடம் பார்த்துச் சோர்ந்த உள்ளத்திற்கு ஆறுதல் தேடும் வகை அக்காலச் சமுதாயத்தில் இருந்ததாகத் தெரிகிறது. இவ்வாறு சோதிடம் கூறுபவர்கள் குறவர்கள்.

வேலன் என்பவனை அழைத்து வெறியாடச் செய்து தன் மகளுக்குள்ள நோயைப் போக்கிவிடலாம் என்ற கருத்து அக்காலத் தமிழரிடையே இருந்தது. இன்னும் மலபார், கொச்சி ஆகிய இடங்களிலே வேலனை அழைத்து வருங் காலத்தை அறிந்துகொள்ளும் வழக்கம் இருந்துவருகிறது.

கி. பி. 3 ம் நூற்றுண்டிற்கும் 7 ம் நூற்றுண்டிற்கும் இடைப்பட்ட காலத்தை வரலாற்ருசிரியர்கள் இருண்ட காலம் என்று குறிப்பிட்டு, அக்காலத்தில் இலக்கியங்கள் ஏதும் தோன்றவில்லை என்று சொல்லி சமுதாய அமைப்பினை நாம் உணர முடியாதவாறு செய்துவிட்டார்கள்.

பல்லவப் பேரரசனான மகேந்திர வர்மன் "மத்தவிலாச பிரகசனம்" என்னும் நூலை எழுதித் தன் மதமான சமண மதத்தையே கண்டித்துள்ளமை அக்கால சமுதாயத்தினர் சைவ மதத்தை மிகுந்த அளவில் மதித்துப் போற்றினர் என்பதைத் தெளிவாக்குகின்றது.

ஏறத்தாழ 9 ம் நூற்றுண்டில். எழுதப்பட்டதாகக் கருதப்படும் சிந்தாமணி சமண சமயக் கொள்கைகளை விளக்கக்கூடிய ஒரு நூலாக இருந்தபோதிலும் சமுதாய அமைப்பினை நன்கு விளக்கக்கூடிய ஒரு பெரு நூலாக விளங்குகின்றது.

ஆண்மையுள் ஆண்மை பிறன்மனை நோக்காமல் இருத்தல்-என்று திருவள்ளுவர்ப் பெருந்தகை கூறியுள்ளார். இந்த உயர்ந்த கருத்து தேவர் காலத்திலும் இருந்தது என்பதை நாம் சிந்தாமணியால் அறிய முடிகிறது. தன் தமையன் மனைவியாகிய தத்தையை நந்தட்டன் நிமிர்ந்து நோக்காமல் உள்ளத்தால் அடி ஒன்றையே நோக்கி, பணிந்து, வீழ்ந்து "எங்குள்ளார் அடிகள்" என்று கேட்டான். "செங்கயற் கண்ணினாள் தன் சிறடிச் சிலம்பு நோக்கி, "எங்குளார் அடிகள்?" என்னா இன்னணம் இயம்பினானே." (சிந்-1705) இதே நிலையில் இலக்குவன் சீதையை நோக்கியதாகக் கம்பன் கூறுகிருன்.

இறைவன் பால் பேரன்பு கொண்ட மக்கள் இறைவன் தங்கள் மனதை மனித உருவில் வந்து சோதிப்பதாகக் கருதினார்கள். "எங்கெல்லாம் அன்பு உண்டோ, அங்கெல்லாம் கடவுள் உண்டு" என்ற வாய்மையினைப் பெரிதும் நம்பினார்கள். இந்த நம்பிக்கையினைப் பெரிய புராணம் "வாளால் மகவரிந்து ஊட்டிய" பரஞ்சோதியார் வரலாறு மூலமாகவும், மனைவியை விருப்பிக் கேட்ட அடியவர்க்கு விரும்பியளித்த இயற்பகையார் வரலாறு மூலமாகவும் விளக்கியுள்ளார். இம்முறையில் செல்லும் அந்த நூலால் மக்கள் சமுதாயம் சைவம் அல்லாத பிற எல்லா மதங்களையும் வெறுத்து, கண்டித்து ஒதுக்கியமையை விளக்குகின்றது.

மக்கள் மனம் 16, 17 ஆம் நூற்றுண்டுகளில் சோம்பியதாகத் தெரிகிறது. நல்ல நூல்கள் அக்காலப் புலவர்களால் எழுதப்படவில்லை. உண்டு களித்துப் பொழுது போக்கத் தெரியாதவர்களால் எழுதப்பட்ட தல புராணங்கள் பெருவாரியாகத் தோன்றிய அக்காலம் சமுதாய வளர்ச்சி இன்மையைக்காட்டுகின்றது.

கலையிலே மறுமலர்ச்சி,எண்ணத்திலே எழுச்சி, மொகலாயர்கள், கிருத்துவர்கள் ஆகியவர்களுடைய கூட்டுறவில் சமுதாயத்தில் மாற்றங்கள் பல ஏற்பட்டன. புலவர்களுக்குரிய மதிப்பினை அளிக்கக்கூடிய நிலையில் சமுதாயம் உயர்ந்தது.

பழையன கழிந்தது; புதியன புகுந்தன. இந்நூற்றுண்டில் மக்கள் சமுதாயம் தல புராணங்களை விரும்பவில்லை. சமயக் கருத்துக்களை வற்புறுத்தும் வெறிபிடித்த இலக்கியங்களை விரும்பவில்லை.

எந்த நூற்றுண்டிலும் தோன்ருத அளவுக்கு சமுதாயத்தின் வளர்ச்சிக்குத் துணை புரியும்முறையில் மக்கள் மனத்தை வளர்த்து, அறிவை இயக்கவல்ல நல்ல நூல்கள் தோன்றியுள்ளன. 'கண்மூடிப் பழக்கமெலாம் மண்மூடிப் போக' என்று பாடிய இராமலிங்க அடிகள் கருத்துக்கு ஒப்ப இன்றைய சமுதாயம் வளர்ந்துள்ளது. நேர்மைக்கு மாருக எது நடந்தாலும்—தவறைத் தவறு என எண்ணி எடுத்துக் கூறி நிலை நிறுத்திய நக்கீரர் போல-எண்ணியதை எண்ணியாங்கு எடுத்துக் கூறவல்ல மக்களை இன்றைய சமுதாயம் பெற்றுள்ளது. இருந்ததனை, இருந்தபடி, இருந்து காட்டிய நிலைமை மாறியது. மக்களின் இந்த மனநிலைக்கு ஏற்பவேதான் உலக நூல் என்று போற்றப்படும் திருக்குறளுக்கு நாள்தோறும் புத்துரைகளும், புதிய கருத்துக்களும் பிறக்கின்றன.

கவிமணி, பாரதியார், பாரதிதாசன், இராமலிங்கனார் ஆகிய கவியரசர்களின் படைப்புக்களை எல்லாம் படிக்கும்போது இருபதாம் நூற்றுண்டைய சமுதாயச் சிறப்பினை நாம் நன்குணர முடிகின்றது.

இதுகாறும் சங்க காலம் முதல் இருபதாம் நூற்றுண்டு வரை இடைப்பட்ட காலத்திலே இருந்த சமுதாய அமைப்பிற்கு ஏற்பத் தோன்றிய இலக்கியங்கள் பலவற்றையும், அந்த இலக்கியங்கட்கும் சமுதாயத்திற்கும் உள்ள தொடர்பினைப் பற்றியும், சான்றுகள் பலவற்றின் துணைகொண்டு அறிந்தோம். இலக்கியம் காலத்தின் கண்ணாடி என்ற உண்மை இதுகாறும் காட்டிவந்த உண்மைகளால் நன்கு விளங்கும்.

இலக்கியமும் சமுதாயமும் மனித வாழ்வை விளக்கவல்ல ஒரே நேர் கோடு எனலாம்.

—பொன். முகமது கனி.

★ ★

— 5ம் பக்கத் தொடர்ச்சி —

நேரம் செல்லச் செல்ல கிழவியைப் பற்றிய சந்தேகம் வளரத் தொடங்கியது. ஏனென்ருல் அவள் சிரிப்பதை விட்டு விட்டு இப்போது பேச ஆரம்பித்து விட்டாள். திடீரென்று, 'ஒன்று! இரண்டு!! மூன்று!!!' என்று கதறத் தொடங்கினாள். ஒருவேளை, இந்தக் கிழவி ஆரம்பப்பள்ளிக்கூடத்தில் ஆசிரியையாக இருந்திருப்பாளோ என்று கூட நினைத்தேன். ஆனால், இவ்வளவையும் பார்த்து எனக்குத் தாங்கமுடியாத துயரமாக இருந்ததே தவிர சிரிக்க முடியவில்லை.

வண்டி அவ்ராவைப் பிடிப்பதற்கு ஐம்பது மைல்களே பாக்கியிருந்தன. அதற்குள்ளாக இந்தப் பையனை விசாரித்துவிட என் மனம் துடியாய்த் துடித்தது.

வாலிபனோடு ஆங்கிலத்தில் பேசிப் பார்த்தேன். அழகாகப் பேசினான்.கிழவியின் கதையைக் கேட்டேன். அவன் கண்கலங்கச் சொன்னான்:

நான் கிழவிக்குப் பேரன். மகள் பிள்ளை. என்னுடைய தாயார் கல்கத்தாவில் உத்தியோகம் பார்க்கிருர்கள். இந்தக் கிழவிக்கு மூன்று மகன்கள் இருந்தார்கள். மூத்தவர் நேதாஜியின் படையில் சேர்ந்து பர்மாவில் போர்புரிந்தார். அவர் இன்னும் திரும்பவே இல்லை. இரண்டாவது மகன் இரண்டாவது உலகப் போரில் ஈராக் போர்முனையில் மடிந்து போனார்.மூன்ருவது மகன் தமிழ் நாட்டில் நடைபெற்ற ஆகஸ்ட் கலவரத்தில் பங்கேற்று தேவ கோட்டையில் சுட்டுக்கொல்லப் பட்டார். அதிலிருந்து என் பாட்டிக்கு பைத்தியம் பிடித்துவிட்டது. ஒன்று, இரண்டு, மூன்று என்று கதறுவதின் பொருள் இதுதான் என்ருன். எனக்கும் கண்கலங்கிவிட்டது.

வண்டி அவ்ராவில் நின்றது. கல்கத்தாவில் வாழும் தமிழர்கள் எங்கள் வண்டியிலிருந்த பாடகிகளை வரவேற்கத் திரளாகக் கூடியிருந்தார்கள். 'மகாத்மா காந்திக்கி ஜே! பாரத மாதாவுக்கு ஜே!' என்று முழங்கினார்கள். அந்தக் குமாரிகளுக்கு மாலைகள் சூட்டப்பெற்றன. பாவம், கிழவி, ஒன்று, இரண்டு, மூன்று என்று கூவிக்கொண்டே இறங்கினாள். அவளை வரவேற்க அவளுடைய மகள் மட்டுமே வந்திருந்தாள். மக்கள், பாடகிகள் பக்கமாக ஓடினார்கள். அருமைச் செல்வங்களை நாட்டுக்காக இழந்த அந்த கிழவி சுதந்திரப் போராட்ட நூற்றுண்டு விழாவன்று, டொக்கு, டொக்கு என்று கம்பை ஊன்றிக்கொண்டு தனியாக நடந்துபோனாள். எனக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. கல்கத்தா கொண்டாட்டம் என்னைச் சிந்திக்கவே விடவில்லை. ★

தென்றல்

24—8—57

கூட்டுப் பண்ணையும் குழந்தை வளர்ப்பும்

— 11-ம் பக்கத் தொடர்ச்சி —

டாட்டம் தலைவிரித்தாடுகிறது. ஆனால் ரஷ்யாவிலோ வேலைக்கு ஆள் திண்டாட்டம் ஏற்பட்டிருக்கிறது. அந்த அளவிற்கு அந்த நாடு தொழில் மயமாக்கப்பட்டிருக்கிறது. எனவே, சுயமாக இயங்கும் ஆலைகளை உருவாக்குவதில் அரசாங்கம் தீவிரமாக முனைந்திருக்கிறது.

ஆலைப்பிரிவுகளையும், தொழிற்சாலைகளையும் சுயமாக இயங்கும்படி செய்வதால் தேசப் பொருளாதாரத்திற்குத் தேவைப்படும் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் அவற்றிலிருந்து விடுபட்டு வருவார்கள்.

தொழில் மனைகளில் பணிபுரிவோரின் வேலைநேரம் 8 மணியிலிருந்து 7 மணியாகவும், சுரங்கத் தொழிலாளருக்கு 6 மணியாகவும், 16 முதல் 18 வயதுள்ள இளந்தொழிலாளர்களுக்கு 6 மணி வேலை நேரமாகவும் மாற்றப்படவிருக்கிறது இந்த 5 ஆண்டுத்திட்ட முடிவில்.

தொழிலாளர்கள் ஆண்டுதோறும் சம்பளத்துடன் விடுமுறை பெறுவதுடன், அவர்கள் தமது வேலையை விடாது செய்துகொண்டு, அதே நேரத்தில் ஓய்வும் தேவையான சிகிச்சையும் பெறுவதற்கான வசதியும் பெற்றிருக்கிறார்கள். இத்தகு ஓய்வும், சிகிச்சையும் அளிக்கும் நிலையங்களுக்கு 'இரவுநேர உடலாரோக்கிய நிலையங்கள்' என்று பெயர். பகல் நேரத்திலும் இங்கு தங்கலாம். வேலை செய்யவேண்டிய நேரம் போக மீதியுள்ள 16 மணி நேரத்தையும் தொழிலாளர்கள் அவசியமானபோது இங்கு கழிக்கின்றனர். இங்கு தங்குவோர்க்கு நல்ல உணவும் தொடர்ச்சியான மருத்துவ வசதியும் கிடைக்கிறது.

ஆலைகளிலே வேலை செய்யும் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை 'குழந்தை பராமரிப்பு' நிலையங்களிலே விட்டுச் செல்லுகின்றனர். குறிப்பிட்ட நேரத்தில் உணவு கொடுத்துக் கவனித்துக்கொள்ள அங்கு பணிப்பெண்கள் இருக்கின்றனர். இதற்கு ஆகும் செலவில் பெரும்பகுதியை ஆலைகளே ஏற்றுக்கொள்கின்றன.

சோவியத் நாட்டில் பெண்களுக்கு சமத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. அரசியல், பொருளாதார, சமூக, கலாசார முதலிய துறைகளிலே அரிவையர்கள் ஆடவருக்கு நிகராக விளங்குகிறார்கள்.

கோடிக்கணக்கான பெண்கள் ஆலைகளிலும் ஆய்வுக்கூடங்களிலும், காடுகளிலும், கழனிகளிலும் வேலை செய்கின்றனர். இதனால் கட்டாயமாக வேலை வாங்கி வாட்டி வதைக்கப்படுகின்றனர் என்று அர்த்தமல்ல. வேலை செய்வதும், வீட்டைக் கவனிப்பதும் அவரவர் சொந்த விருப்பம்.

ரஷ்யாவில் மகப்பேறு கொள்வது மாண்புள்ள செயலாக மதித்துப் போற்றப்படுகிறது. அதிகக் குழந்தைகளைப் பெற்றெடுக்கும் அன்னைமார்களுக்கு அரசாங்கம் பரிசுகள் வழங்கிப் பாராட்டுகிறது. மக்கள் தொகை வளர்வதில் அந்நாடு பெருமையடைகிறது. வயதானவர்களுக்கும் பெரிய குடும்பங்களுக்கும் 1936 முதல் பண உதவி அளிக்கப்பட்டு வருகிறது.

மணமாகாத மங்கையொருத்தி பெற்றெடுக்கும் மழலைச் செல்வங்களுக்கு, மற்ற குடும்பக் குழந்தைகளைப்போல் சட்டப்படி எல்லாவித உரிமைகளும் உண்டு. குழந்தைகளை விடுதியில் விட்டுவைக்கவோ அல்லது வீட்டில் வளர்க்கவோ அரசாங்கம் பணஉதவி செய்கின்றது. குழந்தைகளை வளர்க்க மேற்படி விடுதிகள் கடமைப்பட்டிருக்கின்றன. அங்கிருந்து எந்த நேரத்திலும் குழந்தையைத் திரும்ப அழைத்துக்கொள்ள தாய்க்கு உரிமை உண்டு.

தவறான முறையில் தாய்ப்பேறு பெறும் பெண்களை தாசி என்றோ வேசி என்றோ பேசித் திரியவில்லை பெருமைக்குரிய ரஷ்யப் பெருமக்கள். மற்ற தாய்மார்களைப் போல் சகல உரிமைகளையும் நலன்களையும் அவர்கள் அனுபவிக்கின்றனர். அந்த அம்மையார்களை யாராவது தரக்குறைவாய்ப் பேசினாலோ அல்லது மரியாதைக் குறைவாய் நடத்த முயற்சித்தாலோ அவர்களைத் தண்டிக்க சோவியத் நாட்டுச் சட்டம் இடம் தருகிறது.

மணமானாலும், ஆகாவிட்டாலும் தம் குழந்தைகளைக் கவனியாது விட்டுச் செல்லும் தந்தையரை சோவியத்நாட்டு மக்கள் கண்டனம் செய்கின்றனர். இத்தகையோர் நெறி தவறியவர்களாக கருதப்படுகின்றனர். எல்லோரும் இவர்களுடைய நடத்தையைப் பகிரங்கமாக கண்டனம் செய்கின்றனர். எல்லா ஏடுகளும் இவர்களைக் கண்டித்து எழுதுகின்றன.

குழந்தைகளை நல்ல முறையில் வளர்க்க பெற்றோர்களைவிட அரசாங்கம் அதிக அக்கரை காட்டுகிறது. பெரிய நகரங்களில் "பெற்றோர் பல்கலைக்கழகங்கள்" இருக்கின்றன. அது மட்டுமல்ல "பெற்றோர் போதனை முறைப்பள்ளி"களும் உண்டு. அங்கெல்லாம் குழந்தை வளர்ப்பு சம்பந்தமான விரிவுரைகள் தரப்படுகின்றன. குழந்தை வளர்ப்புத் திட்டங்கள் வானொலி மூலமும், ஏடுகள் வழியாகவும் எடுத்துரைக்கப்படுகிறது. குழந்தைகளுக்கென பல்வேறு மொழிகளில் ஏராளமாக ஏடுகள் வெளியிடப்படுகின்றன.

குழந்தைகள், கோடை விடுமுறையைக் கழிப்பதற்காக மலை சார்ந்த இடம், காடுகளின் அருகாமை, இயற்கை தவழும் இன்னும் பிற இடங்களிலேயும் சின்னஞ்சிறு நகரங்கள் கட்டப்பட்டுள்ளன. விளையாடுமிடம், பூம்பொழில், நீச்சல்குளம் முதலியனயாயும் அங்குள்ளன. தொழிலகங்கள், ஆலைகள் மற்றும் இதர நிறுவனங்கள் இந்த முகாம்களை நடத்துகின்றன.

கல்வியைப் பொறுத்த வரையிலும் ரஷ்யா ஒரு முன்னோடியாகவே விளங்குகிறது. உயர்தரக் கல்வி நிறுவனங்கள் உள்பட எல்லாக் கல்வி நிலையங்களிலும் இலவசக்கல்வி அளிக்கப்படுகிறது. ஏழாண்டு கட்டாயக்கல்வி இப்போது அங்கே அமுலில் இருக்கிறது. பத்தாண்டு கட்டாயக் கல்வி பெரிய நகரங்களில் மட்டுமே அமுலாக்கப்பட்டிருக்கிறது. நடைபெறும் 6 வது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த பத்தாண்டுக் கட்டாயக் கல்வி கிராமங்களுக்கு விரிவாக்கப்படவிருக்கிறது.

பொதுப்பள்ளிகளில் பல்தொழிற் கல்வி அளிக்கப்படுகிறது. சோவியத் நாட்டில் 1955-ம் வருட முடிவில் 800 உயர்தரக் கல்வி நிலையங்கள் இருந்தன. இதில் பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை 33.

14 வயதிற்கு மேற்பட்ட ஆண் பெண் அனைவருக்கும் தொழிற் கல்வி வழங்கப்படுகிறது. தொழிற் பள்ளிகளும், இரயில்வே பள்ளிகளும் 1940 முதல் திறக்கப்பட்டு பயிற்சி கொடுக்கப்படுகிறது. அங்கு பயிற்சி பெறுவோர்க்கு ஏற்படும் செலவு அனைத்தையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்கிறது. இப்பள்ளிகளில் பயிற்சி முடிந்தவுடன் உடனே தொழில் மனைகளுக்குச் செல்லுகின்றனர். எனவே வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு அங்கு இடமில்லாது போய்விடுகிறது.

குழந்தைகளுக்கு 8 வது பிரிவு வரை கல்விக்காக பெற்றோர்கள் ஒரு சிறிதும் பணம் செலவழிக்க வேண்டியதில்லை. 8, 9, 10 வது பிரிவுகளுக்கு சிறிதளவே செலவு ஏற்படுகிறது; மீதியை அரசாங்கமே செலவழிக்கின்றது.

மேற்கூறிய அத்துணை வசதிகளையும் ரஷ்ய மக்கள் அனுபவிக்கின்றனர். ஆனாலும் ரஷ்யாவில் ஜனநாயக் கொள்கைகள் குழிதோண்டிப் புதைக்கப்பட்டு விட்டதென்றும், அங்கு ஏகாதிபத்தியம் தாண்டவமாடுகிறதென்றும் ஒரு சிலர் குற்றம் சாட்டுகின்றார்கள். அப்படிக் கூறுபவர்கள் ரஷ்யாவின் உண்மை நிலை தெரியாதவர்கள் என்றுதான் முடிவுகட்ட வேண்டியிருக்கிறது.

ஒரே கட்சி அங்கு ஆட்சி நடத்தி வருகின்றது என்பது உண்மைதான். மக்களின் நலன்களைக் கவனிப்பதில் எந்தக் கட்சியாய் இருந்தாலென்ன? மக்கள் கவலையின்றி வாழ்கின்றனரா? வாழ்க்கைத்தரம் வளர்ந்தோங்குகிறதா? என்பதைத்தான் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

மனிதனை மனிதன் சுரண்டாமலிருப்பது-தேசிய, மத சுதந்திரம்-வறுமையற்ற வாழ்வு - வேலையில்லாத் திண்டாட்டத்திலிருந்து விடுதலை - எதிர்காலத்தில் என் செய்வோம் என்ற ஏக்கத்தைப் போக்குவது-இவைகள் தாம் உண்மையான ஜனநாயகத்தின் அடிப்படைகளாகும். இவைகள் எல்லாவற்றையும் சாதித்த ரஷ்யா உண்மையிலேயே ஒரு ஜனநாயக நாடுதான் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

"ரஷ்யா உலகிலேயே ஒரு முன்மாதிரியான ஜனநாயகமாக விளங்கும்" என்று மார்க்ஸிம் கார்க்கி 50 ஆண்டுகட்குமுன்பு கூறினர். அதே போலவே ரஷ்யா இன்று விளங்குகிறது.

இன்றைய 20-ம் நூற்றாண்டு எழுத்தாளர்களான அனடோல் பிரான்ஸ், பெர்னட்ஷா, தியோடர் ட்ரீஸர் ஆகியவர்களும் 'ஒளியுள்ள புது உலகை உருவாக்குகிறது ரஷ்யா' என்று எழுதியுள்ளனர்.

நாட்டை நோக்கியிருக்கும் பல பிரச்சினைகளிலும் பொது மக்கள் தங்கள் ஒத்துழைப்பை நல்குகின்றனர். தொழிலாளர் சங்கம், வாணிக சங்கம் போன்ற அமைப்புக்கள் நிறுவ அனுமதிக்கப்படுகிறது. அந்தக் கழகங்கள் தங்கள் எண்ணங்களை தத்தமது ஏடுகள்மூலம் எடுத்துரைக்கின்றன.

'பிராவ்தா' முதல், தொழில் நிலையங்களிலேயுள்ள சிறிய ஏடுகள் வரை எல்லா ஏடுகள் மூலமாகவும் பொதுக்கூட்டங்கள் வாயிலாகவும் பொதுமக்கள் தமது எண்ணங்களை வெளியிடுகின்றனர். ஆலைத்தொழிலாளர்கள், அலுவலகப் பணியாட்கள், மாணவ மாணவிகள் ஆகிய பலதரப்பட்டோரின் குரல்களுக்கும் அரசாங்கம் செவிமடுக்கிறது.

எந்த ஒரு பிரச்சினையையும் தொழிலாளர்களால் அனுப்பப்பட்ட பிரதிநிதிகளின் துணைகொண்டு அரசாங்கம் செய்து முடிக்கிறது. பிரதிநிதிகள் ஓட்டு முறையால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

அணு ஆயுதங்களைச் செய்து முடித்து ஆதிக்க வெறியால் சிறிய நாடுகளை அச்சுறுத்துகிறது ரஷ்யா என்று சிலர் கூக்குரல் எழுப்புகின்றனர். அது எந்த அளவில் உண்மை என்பதை இங்கு பார்ப்போம்.

அணு, நீர்வாயுக்குண்டுகள், ஒரு கண்டத்திலிருந்து மற்றொரு கண்டத்தைத் தாக்கக்கூடிய 'ராக்கட்' ஆயுதங்கள் போன்ற பயங்கரமான பெருநாச அழிவு சக்தியைக் கண்டுள்ள புதுரக ஆயுதங்களின் உற்பத்தி நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டிருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் இதை ரஷ்யா மட்டும்தான் தயாரிக்கிறதா? அல்ல, அல்ல. அமெரிக்கா, பிரிட்டன் முதலியவைகளுக்கும் இதில் சம பங்குண்டு.

அணு ஆயுத சோதனைகளினால் விளையக்கூடிய எண்ணற்ற இன்னல்களைக்கண்டு உலக மக்கள் அனைவருமே அஞ்சுகின்றனர். எனவே சோதனைகளை நிறுத்தும்படி கெஞ்சுகின்றனர். மேற்குறித்த மூன்று நாடுகளும் ஒரு சேர நிறுத்தினால்தான் பேரபாயத்திலிருந்து உலகம் தப்பமுடியும்.

சோவியத் நாட்டைப் பொறுத்த வரையில் சோதனைகளை நிறுத்தத் தயாராகவே இருக்கிறது. ஆனால் மற்ற நாடுகளும் ஒருப்படவேண்டுமே? இதைப்பற்றி ரஷ்ய அயல் நாட்டு மந்திரி ஏ. குரோமிகோ விளக்கம் தந்திருப்பது கவனிக்கத் தக்கது.

"சோவியத் யூனியன் மட்டும் அணுநீர்வாயு ஆயுதங்களின் பரிசோதனைகளை நிறுத்திக்கொண்டால், அமெரிக்கா பிரிட்டிஷ் சர்க்கார்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இருக்காது என்பதைக் கூறத் தேவையில்லை. ஆனால் சோவியத்

— 8-ம் பக்கம் —

நாட்டுப் பற்றினால் நறுமணம் பெற்றன!

சாற்றுங்கள் நீதி! இது ஏகாதிபத்தியமா?

தென்றல்

பதிவு எண்: எம். 6529 16 காசு — 24-8-5[illegible]



1. பள்ளியறைக் குள்ளே பகை.

மாசகலக் கற்றுவரும் மாணவச் செல்வங்காள்!
நாச அரசியலை நாடாதீர்-பூசலுறும்;
உள்ளங்கள் ஒன்ருக ஓதுகையில் நன்ருமோ
பள்ளியறைக் குள்ளே பகை?

-செல்வதாசன், சென்னை-1.

★

துள்ளி விளையாடும் தோகை மயிலிருக்கக்
கள்ளியோ டாடிக் களித்துவிட்டு-மெல்ல மெல்ல
வெள்ளி முளைத்தபின்பு வீடுவந்தா லேற்படாதோ
பள்ளியறைக் குள்ளே பகை!

-சா. ரிச்சர்ட்லெட், நாமக்கல்.

★

வெண்மதியை அல்லி வெறுப்பதுண்டோ வையத்தில்?
கண்ணை இமையேதான் காக்காதோ?—பெண்மானே!
தள்ளியே ஓடாதே! தாஇன்பம்! காட்டாதே
பள்ளியறைக் குள்ளே பகை.

-கி. கண்ணன், அகரப்பேட்டை.

★

முல்லை மலர்விரித்தும், மேனி முழுதசைத்தும்,
கள்ளூறும் செவ்வாய்க் கனிகொடுத்தும்,—உள்ளூறக்
கள்ளி யவளிடத்தில் காதற்றேன் ஊருக்கால்,
பள்ளியறைக் குள்ளே பகை.

-பே. சா. தனராசு, சேலம்.

★

[illegible]ல்லாமை நீக்கவேண்டும்; இப்புவியில் இன்புற்று
எல்லோரும் வாழவேண்டும்; நற்றுணையாய்—நல்லாளைக்
கொள்ளவேண்டும்; என்றுமே கொள்ளாமை வேண்டும்
பள்ளியறைக் குள்ளே பகை.

-து. கருப்புசாமி, சென்னை 23.

★

கிள்ளினுள்; மேல்விழுந்து கெஞ்சினுள்; மெய்மறந்தேன்,
அள்ளினுள் என்பொருளை; அள்ளியபின்-நள்ளிரவில்
தள்ளிக் கதவடைத்தாள் சண்டாளி; சொல்லுவதென்?
பள்ளியறைக் குள்ளே பகை.

-மா. சுப்பையா, நாரைக்கிணறு.

★

செந்தமிழைத் தாழ்வு செயும்வகையில் எங்கிருந்தோ
வந்தமொழி இந்தி வளர்ப்பாயேல்—எந்தமிழா!
உள்ளதடா உந்தன் உணர்ச்சிகெட்ட தன்மைக்குப்
பள்ளியறைக் குள்ளே பகை.

-கே. சீனுவாசன், செங்கற்பட்டு.

★

ஆசைக் கொருமகனும் அன்புக் கொருமகளும்
பாசமுடன் பெற்றபின்னர் பைங்கொடியே-காசினியில்
உள்ள உறுதியுடன் உண்டாகச் செய்திடுவாய்
பள்ளியறைக் குள்ளே பகை.

-கா. சண்முகம், பேரூர் செட்டிபாளையம்.

★

கல்வியென்ற ஆளனுக்குக் கட்டிவைத்த தோர்மனைவி
நல்லறிவை யூட்டிவரும் நந்தமிழாள்—பல்துறையில்
தெள்ளறிவைப் பாலகர்க்குத் தந்திடும்போ திந்தியென்பாள்
பள்ளியறைக் குள்ளே பகை.

-வெண்ணெய்வேலன், திருவெண்ணெய்நல்லூர்.

★

ஓங்கும் அறிவொளியை ஊட்டுகின்ற போதனையை
வாங்காமல் தோழரொடு வாதாடி-ஆங்கு
தள்ளிவிளை யாடுகின்ற தம்பிகளுக் காசிரியர்
பள்ளியறைக் குள்ளே பகை.

-அ.ச. பாலு, பொள்ளாச்சி.

★

முன்மூன்று பெண்கொண்டும் மூப்பைத் தழுவியுமக்
கன்னெஞ்சன் எந்தன் கரம்பிடித்தான்-என்செய்வேன்?
கொள்ளித்தீ முன்வைத்த கோலமலர் எந்தனுக்குப்
பள்ளியறைக் குள்ளே பகை.

-ஆ. சிவானந்தம், திருவையாறு.

★

உள்ளச் சலனம் உணர்வெய்த ஓரிரவில்
மெள்ளத் தழுவயாம் மேவுகையில்-பிள்ளையவன்
கொள்ளைதான் போனதுபோல் கூவும் குரலெமக்குப்
பள்ளியறைக் குள்ளே பகை.

-பி. கோவிந்தன், பி. ஏ. சென்னை-15.

★

தெள்ளுதமிழ்த் தீஞ்சுவையே, தேனே, தமிழுள்ளம்
உள்ளுகின்ற போதினிக்கும் உள்ளுணர்வே-பள்ளுதமிழ்
அள்ளிமிக நாம்துய்க்க ஆர்வமுரு தென்னவிது
பள்ளியறைக் குள்ளே பகை?

-செ. வரதராசன், கள்ளக்குறிச்சி.

★

பத்தாண்டில் நாடுமொழி யாவும் பறிகொடுத்து
அத்தானே பெற்றீர் வரிச்சுமையை!-முத்தமினிப்
பிள்ளைக்கே; நாடுபெறப் போராடும் நாள்வரைக்கும்
பள்ளியறைக் குள்ளே பகை.

-செ. அய்யாதுரை, தல்லாகுளம்.

★

கொஞ்சிக் குலவக் குழந்தைக ளேராளம்
கஞ்சிக்கோ வீட்டில் கதியில்லை-மஞ்சத்தில்
துள்ளும் பிறைநுதலே! சீராக மேற்கொள்வோம்
பள்ளியறைக் குள்ளே பகை.

-ந. அலி, துறையூர்.

★

கொள்ளிவாய் மூட்டை கொசுக்களின் தாலாட்டு
முள்இல் கடிகாரம் முன்பெற்ற-செல்வமும்
வல்லிசையால் முன்னிரவில் வாய்கிழிக்க இத்தனையும்
பள்ளியறைக் குள்ளே பகை.

-மா. கண்ணப்பன், சென்னை-30.

★

அன்பே உருவாக ஐம்புலனுக் கின்புதர
இன்னுமென்ன வேண்டும் இவளன்றி-இன்பமதை
அள்ளித் தருவதெலாம் வேண்டேன் அவையெனக்குப்
பள்ளியறைக் குள்ளே பகை.

-வே. இரா. சிவஞானவள்ளல்.

★

கத்தியும் ரத்தமுங் காணுப் பெரும்பகையாம்;
சத்தமில்லாச் சங்கதியாம்; சாமத்தில்-முத்துகின்ற
கொள்கை விசித்திரங் கொண்டதுடல் கூடுகின்ற
பள்ளியறைக் குள்ளே பகை!

-தொல்காப்பியன், அகரப்பேட்டை.

★

மான்பழிக்குங் கண்ணுய்! மயில்நாணுஞ் சாயலாய்!
தேன்மொழியே! செப்பாயோ செய்தபிழை?-காண்மலர்சூழ்
பள்ளியிலே அன்பாய்ப் பழகியின்று காட்டுவலென்
பள்ளியறைக் குள்ளே பகை.

-கு. வே. இராமகோடி, சென்னை-7.

★

எங்குந் தொழிலாளர் ஏதேனும் பொன்பெறின்
பொங்கி யெழுங்கோபம் போக்குவரே-தங்கத்தை,
வெள்ளிதனைக் கண்டவுடன் வேல்விழியார் போக்குவரே
பள்ளியறைக் குள்ளே பகை.

-கோ. ராஜாம்பாள், திருச்சி.

★

நிலவிரவைத் தென்காற்றின் நேர்த்தியைவீ ணாக்கிப்
புலவியினைப் போற்றுகின்ருய் பொன்னே!-கொலை அமரைக்
கொள்ளும் களம்நடுவே கோழையுளம் போலன்ரே
பள்ளியறைக் குள்ளே பகை!

-எஸ். எஸ். அப்துல்ரஹிமான், கீழச்சந்தைப்பேட்டை.

★

அந்தமிலா இன்பநிலை அந்தியெலா மென்னுடமை
எந்தலைவ ரின்றில்லை வெந்துயிலே-அந்தநாள்
தள்ளிவைத்த காரணத்தா லென்மீது கொண்டனையோ
பள்ளியறைக் குள்ளே பகை?

-கு. பொன்னப்பன், மேல்மட்டை.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6. தமிழ்நாடு.